Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

EXPRESS MANOJ

The Finest Express Service in the Field.

உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 19 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 02 (05.11.2005) சனிக்கிழமை இதழ்:36

## கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மாகியப்பிட்டியில் சடலம் மீட்பு!

சண்டிலிப்பாய் —

சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் சுந்தரம்பிள்ளை கஜேந்திரநாத் (வயது-58) எனக்கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகே ஆள் நடமாட்டம் குறைந்த பகுதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவருக்கு காயம்!

யாழ்ப்பாணம் —

முகமாலை சோதனைச்சாவடியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமுற்ற இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுளார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனம் ஒன்று முகமாலையில் சோத னைக்காக நிறுத்தப்பட்டிருந்தபோது - சோதனைச் சாவடிக்கு அருகில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வின்சர் சந்தி காவலரண் மீது நேற்றுப் பகல் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம் —

யாழ்.வின்சர் தியேட்டர் சந்திக்கு முன்பாகவுள்ள இராணுவக் காவல ரண் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் மேற்படி காவலரணின் முன்பகுதி சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் இடமபெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் மேற்படி காவலரணின் முன்பகுதி சேதமடைந்ததைத் தொடர்ந்து சம்பவ (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு தலைமையில் இருந்து விலகுவதற்கு நோர்வே தீவிர ஆலோசனை!

ஒஸ்லோ —

இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும் - ஸ்கன்டிநேவிய கண்காணிப்புக்குழுவுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வது குறித்து நோர்வே அரசு பரிசீலனை செய்யவுள்ளதாக - இலங்கை சமாதான முயற்சிகளுக்கான நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இது தொடர்பாக எரிக் சொல்ஹெய்ம் நோர்வே போஸ்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் -

இலங்கை அமைதி முயற்சிகளின் அனுசரணையாளராகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமைப் பொறுப்பாளராகவும் நோர்வே செயற்பட்டு வருகிறது.

நோர்வேயின் பணிகளை ஜனாதிபதி தேர்தல் களத்தில் பல்வேறு கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்துவருகின்றன.

இதேவேளை - இந்த விமர்சனங்களை அடுத்து கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் - போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைமைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு படையினரிடம் மகிந்த உறுதிமொழி!

கொழும்பு —

ஜனாதிபதியாக தான் தெரிவுசெய்யப்பட்டதும் - போர்நிறுத்த உடன்பாட்டை மீளாய்வு செய்யப்போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பலாலி படைத்தளத்தில் வைத்து படையினருக்கு நேற்று உறுதி மொழி வழங்கினார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்காக நேற்றுக்காலை பலாலி விமான நிலையத்திற்கு வந்தடைந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் காலை உணவை படையினருடன் சேர்ந்து உண்டார். அதன்பின்னர் இராணுவ வைத்தியசாலைக்குச் சென்று படையினரைச் சந்தித்தார்.

அத்துடன் காங்கேசன்துறைக் கடற்படை முகாம்களையும் பார்வையிட்ட பிரதமர் - தான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டால் மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக படையினரிடம் விளக்கினார்.

நாட்டின் பிரதமரான என்னால் லண்டன் மற்றும் அமெரிக்கா போன்ற உலக நாடுகளுக்கெல்லாம் போக முடிகிறது. ஆனால் எனது நாட்டின் சில பகுதிகளுக்குச் செல்ல முடியவில்லை. நடைமுறையில் இருக்கும் போர்நிறுத்த உடன்பாட்டில் குறைபாடுகள் உள்ளன. இதனால் போர்நிறுத்த ஒப்பந்தம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் நியமனம் வழங்குவதாக கூறி மகிந்தவின் கூட்டத்துக்கு ஆள் திரட்டல்!

யாழ்ப்பாணம் —

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டோர் - யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்டவர்கள், வேலைவாய்ப்புத் தொடர்பாக பேசுவதற்கு வருமாறு அழைக்கப்பட்டவர்கள், மற்றும் சிவில் உடையிலிருந்த பொலிஸாருமே எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றதாகக் கூறப்படுகிறது. இந்தக் கூட்டத்துக்கென யாழ்ப்பாணத்திலிருந்து வாகனங்கள் மூலம் கடும் பாதுகாப்புடன் நூற்றுக்கும் அதிகமானோர் கொண்டுசெல்லப்பட்டிருந்தனர்.

தொண்டராசிரியர் நியமனம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஸ்ரீதர் தியேட்டருக்கு வருமாறு ஈ.பி.டி.பியினரால் அழைக்கப்பட்டவர்களும், சிவில் உடையில் இருந்த பொலிஸாருமே இவர்கள் எனத் தெரியவருகிறது.

இராணுவ வாகனங்கள், பஸ்கள் மூலம் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட இவர்கள் பின்னர் - யாழ்.நகருக்கு கொண்டுவந்து இறக்கிவிடப்பட்டதாகவும் - தொண்டராசிரியர் நியமனம் தொடர்பாக இவர்களிடம் எதுவுமே கதைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்துக்கு ஆள்பிடிக்கும் நோக்குடனேயே ஈ.பி.டி பியினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த சமாதான உடன்படிக்கை இலங்கையில் ஏற்படவேண்டும்!

ஐ.நா.பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு

இந்தோனேஷியாவின் ஆசே இனப்பிரச்சினைக்கு பின்னர் உலகின் அடுத்த சமாதான உடன்படிக்கை இலங்கை யிலேயே ஏற்படவேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக இடப்பெயர்வுப் பிரிவின் பொறுப்பாளர் டெனிஸ் மக்மனாரா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஆசிய பசுபிக் வலய நாடுகளின் தேசிய மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான சர்வதேச கருத்தரங்கை தொடக்கி வைத்து ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டட வடிவமைப்பு, கட்டுமான வழிகாட்டு நெறிகள் அறிமுகம்!





கிளிநொச்சி —

தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டட வடிவமைப்பு, கட்டுமானங்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகள் அறிமுகம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வடக்கு - கிழக்கில் செயலாற்றும் பொறியியலாளர்களுடனான சந்திப்பில் அறிமுகப்படுத்தப் பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் -

தமிழீழத் தேசியத் தலைவர் தமிழர் தாயகப் பகுதியில் அனைத்து கட்டுமானப் பணிகளும் தமிழீழ தேசத்தின் எதிர்கால நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையாகவுள்ளார்.

திட்டங்கள் மற்றும் கட்டுமானங்களை முன்னெடுக்கும்போது அவை மக்கள் நலனை மையப்படுத்தியதாகவும், சூழல் பாதுகாப்பு அம்சங்களை கட்டாயமாக உள்ளடக்கியதாகவும் இருக்கவேண்டுமேயன்றி -வெறுமனே நிதியை மையப்படுத்தியதாக இருக்கக்கூடாது.

அரசினது திட்டமிட்ட செயற்பாடுகளால் பெருமெடுப்பிலான அபிவிருத்தித் திட்டங்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு அதிகாரிகள் படுகொலை; அரசாங்கம் தகவல் வழங்கவில்லை!

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு கவலை

கொழும்பு —

இராணுவ புலனாய்வு அதிகாரிகளின் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் நடைபெறுவது குறித்து இலங்கை அரசாங்கம் தேவை யான தகவல்கள் எவற்றையும் தமக்கு வழங்கவில்லையென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ் டோட்டயர் தெரிவித்துள்ளதாவது -

கடந்தவாரம் படுகொலைசெய்யப்பட்ட இராணுவ புலனாய்வு அதிகாரி கேணல் மீடின் மற்றும் லெப் கேணல் முத்தலிப் ஆகியோரின் கொலையுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

TILKO Holidays

Tilko Holidays [Pvt] Ltd.

Jaffna City Hotel
70/6 KKS Road. Jaffna.

TP: 021 222 5969 , Fax: 021 222 7291
E-mail: tilkoholidays@yahoo.com.

* குளிரூட்டப்பட்ட அறைகள், பல் அலைவரிசை தொலைக்காட்சி, சுடுநீர் வசதி மற்றும் போக்குவரத்து, தொலைபேசி, இணைய (Internet) வசதிகள். வெளிப்புற கொண்டாட்டங்களுக்கான பூந்தோட்டம், வாகன தரிப்பிட வசதிகளுடன்.

# தமிழரின் பிரச்சினைக்கு தீர்வில்லாத ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்போம்

## வலிகாம கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம்

சுன்னாகம்

தமிழர்களுடைய பிரச்சினையை தமது வெற்றிக்கு பயன்படுத்தும் கருவியாக முன்வைத்து பொருத்தமற்ற கருத்துக்களை கூறிவரும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் இருவரும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தெளிவான ஒரு தீர்வை முன்வைக்கவுமில்லை. அதற்கு ஒத்திசைவான விடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டவுமில்லை. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ்பேசும் மக்கள் புறக்கணித்து எமது விடுதலைக்கு உரம்சேர்க்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறோமென வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -


சிங்கள தேசத்துக்கான பேரினவாதத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் கட்டாயம் பங்களிக்க வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் கடந்தகால வரலாற்றை தெரியாதவர்களாகும். அதனை சரியாக தெரியாதவர்களாவர். தமிழ்பேசும் மக்கள் தேர்தலில் வாக்களிக்காது விடுவதே புத்தி சாதுரியமென ஏற்றுக்கொள்வர்.

இன்று தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர் இருவருமே சிங்கள பேரினவாத சிந்தனை கொண்டவர்களாகவே தம்மை இனங்காட்டியுள்ளனர். அதனையே தமது விஞ்ஞாபனங்களிலும், சிந்தனைகளிலும் வெளிக்காட்டியுள்ளனர். தவிர, தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தெளிவான தீர்வை முன்வைக்கவுமில்லை. அதற்கு ஒத்திசைவான விடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டவுமில்லை. தமிழர்களுடைய பிரச்சினையை தமது வெற்றிக்கு பயன்படுத்தும் கருவியாக முன்வைத்து பொருத்தமற்ற கருத்துக்களைக் கூறிவருகின்றனர். இப்படியான பசப்பு வார்த்தைகளை கேட்டு இனியும் எமது மக்கள் ஏமாறமாட்டார்கள். தமக்கான ஒரு தனி அரசை அமைக்க அதற்காக உழைத்தும் வருகிறார்கள்.

ஆட்சி அதிகாரத்துக்காக போட்டியிட்டாலும் எம்மைத் துன்புறுத்துவதும், அழிக்கும் அவசரகாலச் சட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதன் மூலம் இவர்களின் சுயரூபத்தை நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

இந்தத் தேர்தலை ஆதரிப்பதால் எமக்கு எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை. இத்தேர்தலை பகிஷ்கரிப்பதன்மூலம் சிங்களத் தலைமைகள் மீது நாம் கொண்டுள்ள அவநம்பிக்கையை சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்த முடியும். எனவேதான் இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் பேசும் மக்கள் புறக்கணித்து எமது விடுதலைக்கு உரம் சேர்த்துக்கொள்ள உதவும்படி கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## றமழான் நோன்பு முஸ்லிம்களால் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம்

முஸ்லிம் மக்களின் புனித றமழான் நோன்புப் பெருநாள் நேற்று யாழ். முஸ்லிம்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

புனித றமழான் தொழுகைகள் நேற்று நகர பள்ளிவாசல்களில் இடம்பெற்ற வேளை முஸ்லிம் மக்கள் தொழுகைகளில் ஈடுபட்டனர். யாழ்.நகர ஜும்மா பள்ளிவாசல், நாவாந்துறை முகமதியா ஜும்மா பள்ளிவாசல்களில் நேற்று பகல் 1.30 மணிக்கு றமழான் விசேட தொழுகைகள் இடம்பெற்றன.

## சிறுவர் முதியோர் தினம்

யாழ்ப்பாணம்

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் இளவாலை, அளவெட்டி பிராந்திய இளைஞர் யுவதிகளால் சிறுவர் முதியோர் தின விழா நாளை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அளவெட்டி குருவளை பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன், சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (91)

# யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 1996 தொடக்கம் 2001வரை கல்வி பயின்று பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கான அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பழைய மாணவர் ஒன்றிய செயலாளர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

**உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறுவோர்**

அபர்ணா செல்வத்துரை, யேசுதாசன் நிறோசானந், கந்தையா அமுதன், குகானந்தன் மாசிலன், மருதலிங்கம் பிரசாந்தன், நடேசபிள்ளை சிறிறஞ்சன், பிரீதினி குமாரசாமி, பிரசாந்தி பெருமாள், ராமச்சந்திரன் சாந்தநாயகி, செல்லத்துரை பிரசாத், சண்முகம் பிறேமகுமார், சாந்தினி தேவி மகாலிங்கம், சுலோசினி பரராஜசிங்கம், சுந்தரமூர்த்தி பிறேமகுமார், தனபாலன் தனேந்திரன், தில்லைதாண்டவர் மங்களேஸ்வரன்

**உயர்தேசிய வர்த்த டிப்ளோமா பட்டம் பெறுவோர்**

சுபாசினி சிவகுருநாதன், தவமலர் கணபதிப்பிள்ளை

**தேசிய வியாபாரமும் நிதியும் டிப்ளோமா பட்டம் பெறுவோர்**

பொன்னம்பலம் உமாசங்கர், சரவணபவானந்தன் கேமலதா,

**தேசிய வியாபார கற்கைநெறி டிப்ளோமா பட்டம் பெறுவோர்**

அப்புத்துரை செந்தூரன், யோகேஸ்வரா சாருமதி, சுகந்தினி தியாகராசா, வானதி ராசரட்ணம்

**தேசிய ஆங்கில டிப்ளோமா**

ஏரம்பமூர்த்தி பகீதரன், யசோதை துரைராஜசிங்கம், கந்தையா சிறி கருணாகரன், லக்ஸ்மணன் குமணன், நர்மதா பரமேஸ்வரன், ரதிவதனி தியாகராஜா, சுபாஜினி பாலசுப்பிரமணியம்.

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைச் சங்கத்தினரால் நடத்தப்பட்டுவரும் இலங்கை அதிபர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு தொடரின் தொடர் அமர்வுகள் - இன்றும் நாளையும் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்விக் கொள்கையும் நிர்வாகமும் விடய ஆய்வு, நுண்ணறிவு போன்ற விடயப்பரப்புகளில் கருத்துரைகள் நடைபெறும். (31)


## நினைவஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்

இலங்கை செஞ்சிலுவைச சங்கத்தின் வலிமேற்கு பிரிவின் கௌரவ தலைவராக பணியாற்றி அண்மையில் உயிரிழந்த நாகலிங்கம் குகராஜாவின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மு.ப 10 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - சங்கத்தின் அங்கத்தவர்கள், தொண்டர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (48)

KEN
இலங்கையின் முதல்தர விநியோகஸ்தர்கள்
பிள்ளையார் பல்பொருள் உதிரிகள் வாணிபம்
இல.308, கந்தசுவாமி கோவில் முன்பாக,
பிரதானசாலை, கிளிநொச்சி.
தொ.பே: 021 2285945
நவம்பர் 5ஆம், 6ஆம்,7 ஆம் திகதிகளில் KEN மின் கருவிகள் இலவசமாகப் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் 10% கழிவு வழங்கப்படும்.
(C/4430)



# பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள்

## மாவட்ட செயலகம்

## கிளிநொச்சி

UNDP

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் பொதுநிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ள மீட்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறன் அபிவிருத்தித் திட்டத்தின் (ADREP) கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்கென கீழே குறிப்பிட்டப்பட்ட பதவிகளுக்கான பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | | வெற்றிடம் |
|---|---|---|
| 1. ஜீவனோபாய அறவீட்டு அலுவலர் | - | 03 |
| 2. காணி இணைப்பாளர் | - | 01 |

**1. ஜீவனோபாய அறவீட்டு அலுவலர்**

i. கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரத்தில் சித்தியும், க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழ் போன்ற பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய சித்தி.

ii. தொழில்சார் அனுபவம் : குறைந்தது எட்டு வருடங்கள் ஜீவனோபாய உதவித்திட்டம் தொடர்பான துறைசார் அனுபவம்.

**2. காணி இணைப்பாளர்**

i. கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரத்தில் புவியியலை ஓர் பாடமாகக் கொண்ட சித்தியும், க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழ், சமூகக்கல்வி போன்ற பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய சித்தி.

ii. தொழில்சார் அனுபவம் : குறைந்தது ஐந்து வருடங்கள் துறைசார்ந்த அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்.


இந்தப் பதவிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படுவதுடன், ஆரம்பத்தில் புதுப்பிக்கக் கூடிய சாத்தியக்கூறுகளுடனான ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இளைப்பாறிய அதிகாரிகள் மற்றும் தற்போது உத்தியோகத்தில் உள்ள பொதுச்சேவையாளர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் இரண்டு உறவினர்கள் அல்லாத நடுவர்கள் அடங்கிய தொலைபேசி இலக்கங்களுடன் சுயவிபரத்துடனான விண்ணப்பத்தை 19.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி மாவட்டம்.

[C/4811]

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
சிவகாசி
விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30



நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், ப்ரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,5.30, 9.30 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜெனிலியா நடித்த
சச்சின்
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)
விசேட காட்சியாக ரஜனி, சிவாஜி, அம்பிகா நடித்த
படிக்காதவன் 9.00 மணி (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், சோனியா அகர்வால், நமீதா, வடிவேலு நடித்த
ஒருபுரக்கண்ணாலே
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)



நல்லூர் லயன்ஸ் கழகம்
நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்துடன் இணைந்து வழங்கும்
இலவச மருத்துவ முகாம்
இடம் : நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்
காலம : 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி
மேற்படி முகாமில் கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், நீரழிவு நோய்ப்பரிசோதனை, இரத்த அழுத்தப்பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படும்.
தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்
IIS City Campus, 181 Navalar Road , Jaffna.
விளம்பர அனுசரணை :
சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொலைபேசி : 021 222 6960
(C/4805)

# சிங்கள மக்களின் நம்பிக்கையை மகிந்தவே பெற்றிருக்கின்றாராம்!

## கருத்துக்கணிப்பில் தெரியவந்தது

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் சிங்கள மக்களின் நம்பிக்கைக்குரிய வேட்பாளராகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருப்பதாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய தேர்தலுக்கு முந்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இதன்படி - நாட்டின் 32.3 வீதமான வாக்காளர் வாழ்க்கைச் செலவீனத்தைக் குறைக்கின்ற வேட்பாளரையே ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளனர். 25.2 வீதமானோர் இனப்பிரச்சினைக்கான தீர்வை பிரதான பிரச்சினையாக முன்வைத்துள்ளனர்.

முஸ்லிம்களும் (41.9 வீதம்), சிங்களவர்களும் (33.9 வீதம்) வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பை பிரதான பிரச்சினையாக கருதுகின்றனர்.

அதேநேரத்தில் தமிழ்மக்களில் பெரும்பான்மையானோர் இனப்பிரச்சினையே பிரதான பிரச்சினையாக கருதுவதாகத் தெரிவித்துள்ளனர்.

வாக்காளர்களில் 15.9 வீதமானோர் கட்சியின் அடிப்படையில் வேட்பாளரை ஆதரிப்பதாகவும் எந்தவொரு வேட்பாளரை ஆதரிப்பதற்கும் குறிப்பிடும்படியான காரணம் எதுவுமில்லை என்போர் 7.9 வீதமாகவும் உள்ளனர்.

22 மாவட்டங்களில் 1200 பேரின் கருத்துக்களின் அடிப்படையில் இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை தமிழ்மக்கள் இந்தக் கருத்துக்கணிப்பில் இணைக்கப்படவில்லை.

பொதுவாக இனப்பிரச்சினையைக் கையாள்கிற தகுதி ரணிலுக்கு இருப்பதாகவும் வாழ்க்கைச் செலவீனத்தை அவர் குறிப்பிட்ட காலத்தில் குறைத்துவிடுவர் என்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குறுகிய காலத்தில் மீளமைப்புப் பணிகளையும் முழுமையடையச் செய்வர் என்றும் நம்புகின்றனர்.

சட்டம், ஒழுங்கு, நாட்டின் கலாசாரம், நாட்டின் பாதுகாப்பு, ஒரே மதக் கோட்பாடு ஆகியவற்றில் மகிந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக மக்கள் உள்ளனர்.

வேலை வாய்ப்பின்மை ஒழிப்பு பிரச்சினையில் இரு வேட்பாளர் மீதம் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இருப்பினும் 17.2 வீதமானோர் எவராலும் வேலை வாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று கருதுகின்றனர்.

அதேநேரத்தில் சிங்களவர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷமீது, ரணில் விக்கிரமசிங்கவைவிட பாரிய நம்பிக்கை உள்ளது.

அமைதி முயற்சிகள் சுனாமி மீளமைப்பு, வேலைவாய்ப்பின்மை, சட்டம் ஒழுங்கு, கலாசார பாதுகாப்பு, ஒரே மதக் கோட்பாடு ஆகியவற்றில் மகிந்த ராஜபக்ஷ மீது சிங்களவர் முழு அளவில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஆனால் இந்த விடயங்கள் அனைத்திலும் ரணில் விக்கிரமசிங்க மீது தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர்.

வேட்பாளர் நேர்மையாக இருக்கவேண்டும் என்பதை 48.2 வீதமானோர் எதிர்பார்க்கின்றனர். தலைமைத்தகுதி (46 வீதம்), அனுபவம் (39.9 வீதம்), கல்வி (39.1 வீதம்) என அவை இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

வேட்பாளரது மதம், இனம், குடும்பப்பின் புலம், ஆகியவற்றுக்கு குறைவான முக்கியத்துவமே அவர்கள் அளித்துள்ளனர். நகர்ப்புற வாக்காளர்கள் மத்தியிலேயே இந்த எண்ண ஓட்டம் இருக்கிறது.

15.2 வீதமானோர் யாரை ஆதரிப்பது என்பதில் முடிவு செய்யவில்லை. 10 வீதமானோர் யாரை ஆதரிப்போம் என்பதைத் தெரிவிக்கவில்லை என்று அந்த கருத்துக் கணிப்பில் கூறப்பட்டது.

# தபால்மூல வாக்களிப்பை முன்னிட்டு நாடெங்கும் விசேட பாதுகாப்பு!

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 7,8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் - இந்த தினங்களில் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

இது குறித்து பொலிஸ் தேர்தல் செயலகம் மேலும் தெரிவித்திருப்பதாவது -

வாக்களிப்புகள் நடைபெறும் அரச நிறுவனங்களைச் சுற்றி இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், விசேட பொலிஸாரால் ரோந்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

தபால்மூல வாக்களிப்பு நாட்களில் இரவில் நாடு முழுவதும் பல இடங்களில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்படும். தேர்தல் நேரத்தில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குவிதிகள் குறித்து பொலிஸ் அதிகாரிகளுக்குக் கைநூலும் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டது.

தபால்மூல வாக்களிப்புகள் நடைபெறும் அரச நிறுவனங்களில் தபால் மூலவாக்களிப்பை கண்காணிக்க பவ்ரல் அமைப்பைச் சேர்ந்த இருவரையும், தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையத்தைச் சேர்ந்த இருவரையும் நிறுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளார்.

அத்துடன், வேட்பாளர்களின் அங்கீகாரம் பெற்ற இரு பிரதிநிதிகளும் அரச நிறுவனங்களில் நிறுத்தப்படுவர். தபால்மூல வாக்களிப்பு நடைபெறும் இரு நாட்களிலும் வாக்களிப்பு நடைபெறும் நிறுவனங்களுக்கு அருகே வேட்பாளர்களின் படங்களைக் காட்சிக்கு வைத்தல், வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

# விமான நிலையமருகே 4 இளைஞர்கள் கைது

கொழும்பு

இரத்மலானை விமான நிலையமருகே சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய 4 தமிழர்களை கல்கிஸைப் பொலிஸார் கடந்த முதலாம் திகதி கைது செய்தனர்.

இராணுவப் புலனாய்வுத் துறையிடமிருந்து கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் திருகோணமலை மூதூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களில் ஒருவருக்கு 17 வயதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவேளை இவர்களிடம் அடையாள அட்டை எதுவும் இருக்கவில்லையெனவும், தாம் ஆடைத் தொழிற்சாலையில் தொழில் தேடி வந்ததாகவும் இந்த நால்வரும் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரத்மலானைப் பகுதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டாரெனவும், இந்த நால்வரும் இந்த பிரசாரக் கூட்டத்தில் ஏதாவது நாச வேலை செய்வதற்காக வந்திருக்கலாமெனவும் பொலிஸார் நம்புகின்றனர்.

இது தொடர்பாக பொலிஸார் இந்த நால்வரையும் கல்கிஸை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதுடன், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் - மன்னார் கடற்பரப்பில் கடற்படை ரோந்து தீவிரம்!

கொழும்பு

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கடற்பரப்பில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக வடபகுதி கடற்படைத் தலைமையக அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவித்தன.

இந்தியாவிலிருந்து படகுமூலம் ஹெரோயின் போதைப் பொருள் கடத்திவரப்படுவது அதிகரித்திருப்பதனால், இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களில் கடற்படை பொலிஸார் மற்றும் கலால் திணைக்களத்தினால் 10 கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்த ஹெரோயின் போதைப்பொருட்கள் வடபகுதி கடற்பரப்பில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்கு கடத்தப்படும் போதைப்பொருளின் ஒரு சொற்ப அளவே கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்படாத பெருமளவு போதைப்பொருட்கள் நாட்டுக்குள் கடத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

# கொழும்பு குற்றத்தடுப்புக்கு இராணுவத்தின் உதவியும்

கொழும்பு

கொழும்பு நகரில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் கொழும்புப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

தற்போது பொலிஸாருடன் இணைந்து இர்ாணுவம் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. அது மேலும் பரந்தளவில் செயற்படவுள்ளதாகவும் - புதிய திட்டத்தின்படி, பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மோட்டார் சைக்கிள் படையணியொன்றைச் செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# பாரபட்சமாக செயற்பட்டால் உரிமம் ரத்துச் செய்யப்படும்!

## - மங்கள சமரவீர எச்சரிக்கை -

கொழும்பு

தனியார் ஊடகங்களில் பாரபட்சமான செயற்பாடுகள் நீடித்தால், அவற்றின் உரிமத்தை



ரத்துச் செய்ய நேரிடும் என்று அமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.

கொழும்பில் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

நாட்டில் தனியார் ஊடகங்களும், தொலைக்காட்சிகளும் பெருமளவில் உள்ளன. இவை ஐக்கிய தேசியக் கட்சியின் தரகர்களாகவும், அந்தக் கட்சியின் வணிகர்களாகவுமே செயற்பட்டு வருகின்றன.

சுதந் திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரங்களை தனியார் தொலைக்காட்சி ஒன்று திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்து வருகிறது.

அந்தத் தொலைக்காட்சியின் விவாதங்களில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் பங்கேற்பதை அவர்கள் தடை செய்துள்ளனர்.

அந்தத் தொலைக்காட்சியின் நிர்வாகத்துக்கு எதிராக ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச கருத்துக்களைத் தெரிவித்திருந்ததால் இந்தத் தடையை ஏற்படுத்தி உள்ளார்கள்.

தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒன்றும் தனிநபர் சொத்து அல்ல. அது அரசாங்கத்தின் பெறுமதியான உரிமப் பத்திரம் மூலமே இயங்குகிறது.

ஒரு வர்த்தகருக்கு அரசாங்கம் உரிமம் வழங்குகிறது என்றால் சில தார்மீக நெறிமுறைகளுக்குட்பட்டு செயற்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலும் தான் வழங்கப்படுகின்றன.

ஆனால், இத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் இருக்கும்போது அந்தத் தொலைக்காட்சிகளின் உரிமத்தை அரசாங்கம் ரத்துச் செய்ய நேரிடும். தனியார் ஊடகங்களின் இந்தச் செயற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் வாரந்தோறும் முறைப்பாட்டு மனுக்கள் கையளிக்கப்படும் என மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த கூறியதாவது -

ஜே.வி.பியின் தொழிற்சங்கத் தலைவர் லால் காந்தவுடன் தொலைக்காட்சி நிலையத்துக்கு விவாதத்தில் பங்கேற்க நாம் சென்றோம்.

ஆனால், அர சியல் விவாதங்களில் ஜே.வி.பியினர் பங்கேற்பதைத் தமது தொலைக்காட்சி நிர்வாகம் அனுமதிக்கக் கூடாது என்று கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் மட்டுமே அத்தகைய விவாத நிகழ்வுகளில் பங்கேற்கின்றனர். அது தனியார் ஊடகமாக இருக்கலாம் ஆனால் தார்மீக நெறிமுறைகளை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்கச் சென்ற ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச, சர்ச்சைக்குரிய அந்தத் தொலைக்காட்சியின் நிர்வாகி ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு வருகிறார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

# முத்தலிப் கொலை சந்தேக நபர்களின் விளக்க மறியல் காலம் மேலும் நீடிப்பு!

கொழும்பு

இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரி லெப். கேணல் முத்தலிப் கொலை வழக்குத் தொடர்பான சந்தேக நபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இந்துரு கொல்ல ஆராய்ச்சிலாகே சஞ்சீவ, அநுர எனப்படும் அத்துல் கெதர ராலலாகே கருணாரத்ன, ராஜன் எனப்படும் ஆறுமுகம் செந்தில்குமார், உமா எனப்படும் ராஜரட்ணம் சரஸ்வதி ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களால் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னிலைப்படுத்தவில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கையைச் சமர்ப்பித்த பொலிஸார் - விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும், அதனால் சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் கொழும்பு மேலதிக நீதிவான் மொகமட் இர்ஸ்தீனிடம் கேட்டுக் கொண்டனர்.

முத்தலிப்பின் கொலைக்கு முன்னர், வாகனத்தின் மூலம் அவரின் போக்குவரத்து நடைமுறைகள் குறித்து உளவாளிகள் உளவு பார்த்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் அளிக்கவும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி அன்றைய தினம் வாகனம் பற்றிய விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஆராய்ந்த பின்னர் விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்யும் உத்தரவை நீதிபதி பிறப்பித்தார்.

# மேற்கிந்தியாவுடனான முதல் டெஸ்டில் வலுவான நிலையில் அவுஸ்ரேலியா!



பிறிஸ்பேர்ன் —

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 435 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்த அவுஸ்ரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் பிறிஸ்பேனில் தொடங்கிய

விளையாட்டு

இந்த ஆட்டத்தில் முதல் நாள் 7 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து விளையாடியது.

ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்தில் ஸ்கோர் 369ஐ எட்டியபோது - வோனின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. பவலின் பந்துவீச்சில் ரம்டீனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 73 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து லீயுடன் பிறாக்கன் இணைந்து கொண்டார். இவர்கள் இருவரும் இணைந்து ஸ்கோரை 417 வரை உயர்த்தினர். இந்த நிலையில் பவலின் பந்தில் கொலிமோரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த லீ, 83 பந்துகளில் 6 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 47 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து பிறாக்கனுடன் மக்ரா இணைந்து ஆடினார். எனினும், ஸ்கோர் 435ஐ எட்டிய போது பிறாக்கன் ஆட்டமிழக்க - அவுஸ்ரேலிய அணியின் முதல் இனிங்ஸ் முடிவுக்கு வந்தது.

எட்வேட்ஸின் பந்துவீச்சில் சர்வானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த பிறாக்கன் - 51 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்களை எடுத்தார். மக்ரா ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.


முதல் இனிங்ஸில் 46 உதிரி ஓட்டங்களை விட்டுக்கொடுத்த மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கொலிமோர் 4, பவல் 3, எட்வேட்ஸ் 2, லோசன் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. கைல் - சிமித் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஆனால், மக்ராவின் வேகப்பந்தில் - ஸ்கோர் 20ஆக இருந்தபோது முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.





கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த கைல் 18 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்தார்.



அடுத்து சிமித்துடன் சர்வான் இணைந்தார். இருவரும் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த போது - ஸ்கோர் 74 ஆக உயர்ந்தது. இந்த நிலையில் சர்வான் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். மக்ராவின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்தே இவரும் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து லாறா களமிறங்கினார். நிதானமாக ஆடிய சிமித்துடன் இணைந்த இவர், ஓட்டங்களைக் குவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் - ஸ்கோர் 134ஆக இருந்த போது பவிலியன் திரும்பினார்.

லீயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்த இவர் - 71 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 30 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்ததாக பெரும் எதிர்பார்ப்புடன் அணித் தலைவர் சந்தர்போல், சிமித்துடன் ஜோடி சேர்ந்தார். ஆனால், 32 பந்துகளைச் சந்தித்து 2 ஓட்டங்களை மட்டுமே எடுத்த இவர் வோனின் பந்துவீச்சில் பிறாக்கனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஸ்கோர் 161 ஆக இருந்தபோது - சாமுவேல்ஸ் ஆட்டமிழந்தார். மக்ராவின் பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 5 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து ஸ்கோர் 174ஆக இருந்தபோது - சிமித்தும் மக்ராவின் பந்தில் போல்டாகி ஆட்டமிழந்தார். இவர் 175 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 88 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்த



போது - மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரம்டீன் 12, பவல் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மக்ரா 4, லீ 1, வோன் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# எமது புதிய இளம் வீரர்களுக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளது

## இந்திய கப்டன் ராவிட் கூறுகிறார்

புனே —



அணியில் புதிதாக இடம்பிடித்த இளம் வீரர்களின் ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது என்று இந்திய அணியின் கப்டன் ராவிட் பாராட்டினார்.

இலங்கைக்கு எதிராக புனேயில் நேற்றுமுன்தினம் நடந்த 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஒருநாள் தொடரை 4-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த ஆட்டம் முடிந்ததும் இந்திய அணியின் கப்டன் ராவிட் கூறியதாவது -

இந்திய வீரர்கள் அனைவரும் அணியாக ஒருங்கிணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது மகிழ்ச்சி அளிக்கிறது. நீண்ட நாளைக்கு பின்பு ஒருநாள் போட்டித் தொடரை வென்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அணியில் உள்ள இளம் வீரர்கள் ஆடிய விதம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இளம் வீரர்களுக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது.


அகர்கரின் பந்துவீச்சு அருமையாக இருந்தது. ஹர்பஜனின் பந்துவீச்சும் சிறப்பாக இருந்தது. அகர்கர் விரைவில் முன்னணி வீரர்களான சங்கஹார, ஜெயசூரிய ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்தது இலங்கைக்கு பலத்த அடியாக அமைந்தது.



டோனி, சுரேஷ் ரெய்னா, வேணுகோபால் ராவ் ஆகியோரின் துடுப்பாட்டம் நெருக்கடியான நேரத்தில் நேர்த்தியாக இருந்தது. டோனிக்கு சற்று ஓய்வு கொடுக்கும்விதமாக 3ஆவது வீரராக களமிறக்கப்படவில்லை. எனது ஆட்டம் திருப்தி அளித்தது. அதே நேரத்தில் தேவையில்லாத ஷொட்டை ஆடி ஆட்டமிழந்தேன். இவ்வாறு ராவிட் கூறினார்.

அதேவேளை, தோல்வி குறித்து இலங்கை அணியின் கப்டன் அத்தபத்து கூறுகையில் - எங்கள் ஆட்டம் நன்றாக அமையவில்லை. இது கடினமான நேரம். சில நல்ல வாய்ப்புகளைத் தவறவிட்டதன் விளைவு இந்த பாதிப்பை ஏற்படுத்தியது. இந்திய அணியினர் ஆட்டத்தை சிறப்பாக முடித்தனர் என்றார்.

# ரெய்லரை முந்தினார் றிக்கி





சிட்னி —


டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் குவித்த அவுஸ்ரேலிய வீரர்களின் பட்டியலில், மார்க் ரெய்லரைப் (7525 ஓட்டங்கள்) பின் தள்ளிக் கொண்டு பொண்டிங் 4ஆம் இடத்தைப் பிடித்தார். இவர் 7 ஆயிரத்து 558 ஓட்டங்களுடனேயே 4ஆவது இடத்தைப் பிடித்தார். சர்வதேச அளவில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் 24ஆவது இடத்திலிருந்து இவர் 18ஆவது இடத்திற்கு முன்னேறினார்.

அதேவேளை - டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் அவுஸ்ரேலியாவின் கிரேக் சப்பல், மேற்கிந்தியத் தீவுகளின் றிச்சார்ட்ஸ் ஆகியோருடன் 8ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டார் பொண்டிங். இவர்கள் மூவரும் தலா 24 சதம் அடித்துள்ளனர். இந்திய வீரர்கள் கவாஸ்கர், சச்சின் ஆகியோர் தலா 34 சதங்களுடன் முதலிடத்தில் உள்ளனர்.

முதல் ஐந்து இடத்தில் உள்ள அவுஸ்ரேலிய வீரர்கள் வருமாறு :

| வீரர் | போட்டி | ஓட்டங்கள் | அ.ப | 100 | 50 | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| போடர் | 156 | 11174 | 205 | 27 | 63 | 50.56 |
| ஸ்ரீவ் வோ | 168 | 10927 | 200 | 32 | 50 | 51.06 |
| மார்க் வோ | 128 | 8029 | 153 | 20 | 47 | 41.81 |
| பொண்டிங் | 95 | 7558 | 257 | 23 | 29 | 55.29 |
| ரெய்லர் | 104 | 7525 | 334 | 19 | 40 | 43.49 |

# பாரிபாஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ்; இரண்டாம் சுற்றில் ரொடிக்!



பாரிஸ் —

பாரிபாஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் அமெரிக்காவின் அன்டி ரொடிக்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பாரிபாஸ் மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடந்த முதல் சுற்றுப் போட்டியில், அமெரிக்காவின் அன்டி ரொடிக் 6-4, 6-7, 7-5 என்ற செட் கணக்கில், சக நாட்டு வீரரான டெய்லர் டென்டை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில், அமெரிக்காவின் கினிபிரி 6-3, 6-7, 6-3 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் நாட்டின் பெர்னாண்டோ வெடாஸ்கோவை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

முதல்நிலை வீரரான ஆஜென்ரீனாவின் டேவிட் நல்பாண்டியன் 6-4, 6-3 என்ற செட் கணக்கில் ஜேர்மனியின் டாமி ஹாஸிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

# தென்னாபிரிக்க அணியிலிருந்து போஜே, கிப்ஸ் நீக்கப்பட்டனர்!



ஜொகனஸ்பேர்க் —

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யவுள்ள தென்னாபிரிக்க அணியில் இருந்து முன்னணி வீரர்கள் நிக்கி போஜே மற்றும் ஹேர்ஷல் கிப்ஸ் ஆகியோர் தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்க அணி விளையாடவுள்ளது. இந்தப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி தொடங்கும். இந்தத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியிலிருந்து கிப்ஸ், சுழற்பந்து வீச்சாளர் நிக்கி போஜே இருவரும் நீக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அதிகாரி டோனி ஜரிஷ் கூறுகையில் -

கிப்ஸ் மற்றும் போஜேவிற்கு எதிராக புதுடெல்கியில் கிரிக்கெட் சூதாட்ட வழக்குகள் உள்ளன. இதுபற்றி டெல்கி பொலிஸார் விசாரிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. மேலும் டெல்கி பொலிஸார் இருவரையும் கைது செய்யமாட்டோம் என்று உத்தரவாதம் அளிக்கவில்லை. இதனால் இருவரையும் அணியில் தெரிவு செய்யவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 12 பந்துகளில் அரைச்சதம்; கௌசல்ய உலக சாதனை!

கொழும்பு —

ஊள்ளூர் போட்டியில் விரைவாக அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனை படைத்துள்ளார் இலங்கை அணியின் வீரர் கௌசல்ய வீரரத்னே. இவர் 12 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசினார்.

இலங்கையில் உள்ளூர் கழக அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. கொழும்பில் கடந்த செவ்வாயன்று நடந்த போட்டியில் ராகம கழகம், குருநாகல் யூத் கழக அணிகள் மோதின. மழை காரணமாக 20 ஓவர்கள் கொண்டதாக குறைப்கப்பட்ட இந்தப் போட்டியில் - ராகம அணி 5 விக்கெட் இழப்பிற்கு 219 ஓட்டங்களைக் குவித்தது. இதில் சிக்ஸர் மழை பொழிந்த வீரரத்னே 12 பந்துகளில் அரைச்சதம் அடித்தார்.

இதன் மூலம், உள்ளூர் போட்டியில் விரைவாக அரைச்சதம் அடித்தவர் என்ற சாதனை படைத்தார்.

இதற்கு முன், 1994இல் இங்கிலாந்து கவுண்டித் தொடரில் யார்க்ஷர் அணிக்கு எதிராக சர்ரே அணியின் அடம் ஹொலியக் 15 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். இந்த சாதனையை முறியடித்த வீரரத்னே 8 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 18 பந்துகளில் 66 ஓட்டங்களைக் குவித்தார்.

இதில் அஜித் வீசிய ஒரே ஓவரில் தொடர்ந்து 5 சிக்சர்களும், ஒரு பவுண்டரியும் அடித்தார்.


அடுத்து ஆடிய குருணாகல் அணி 9.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்களை எடுத்த நிலையில் மழை குறுக்கிடவே ஆட்டம் கைவிடப்பட்டது. சர்வதேச அளவில் விரைவாக அரைச்சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் இலங்கை அணிக்கே முதலிடம்.

1996 இல் சிங்கப்பூரில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஜெயசூரிய 17 பந்துகளில் அரைச்சதம் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முயல் வைத்தியரின் முதலாவது நோயாளி

ஜூலி என்ற இளம் முயல், தன் மருத்துவப் படிப்பையும், பயிற்சிகளையும் முடித்துவிட்டு அப்பொழுதுதான் மருத்துவராக வந்தது. அதன்பின் சொந்த ஊரான கானகத்துக்குத் திரும்பியது. முயலார் சமூகத்தினரிடையே அவர் ஒருவர் மட்டும் முதலாவது மருத்துவர் என்ற பட்டத்தைப் பெற்றவராவார். இதில் மகிழ்வுற்ற அனைத்து முயலார்களும் அதைப் பெருவிழாவாகக் கொண்டாட, அதை மெச்சிய மற்றைய மிருகங்களும் கலந்துகொண்டு சிறப்பித்தன.

இதேவேளை வனஜா என்ற பெண் யானை நோயால் அவதிப்பட்டது. அதற்கு சிகிச்சையளிப்பதற்காக மருத்துவர் ஜூலி வரவழைக்கப்பட்டார். பயிற்சிகளை முடித்துக்கொண்ட ஜூலிக்கு முதல்



ஆளாக வந்தது இந்தப் பெண் யானையான வனஜாதான். மருத்துவர் அணியும் ஆடையணிந்த முயலார் மருந்துகளுடன் அந்த இடத்தை அடைந்ததும் திகைத்துவிட்டனர்.

வேதனை தாளாத வனஜாவின் பிளிறல் ஓசை வனத்தையே அதிரச்செய்துகொண்டிருந்தது. அதன் பாரிய தோற்றம் ஜூலியைப் பயமுறுத்தியதால் அதன் கைகள் நடுங்கின. அது யானையைச் சந்திப்பதும் இதுவே முதற்தடவையாகும். அங்கிருந்து ஓடிவிடலாமா என நினைத்தாலும், தான் ஒரு மருத்துவர் என்பதால் அப்படிச் செய்ய இயலவில்லை.

தடுமாறும் கைகளுடன், தைரியத்தை வரவழைத்த மருத்துவர் ஜூலி தன் உடலிலிருந்த ஸ்டெதஸ்கோப் என்ற பரிசோதனைக் குழாயை வெளியிலெடுத்து வனஜாவின் நெஞ்சில் பதித்தது. ஆனால் அதன் மார்பிலிருந்து டிக்... டிக்... டொக் என்ற ஓசையை அவரால் கேட்கமுடியவில்லை. மேலும் சில கணங்களாகப் பிடித்துக்கொண்டிருந்தபோதும் முடிவு அதேமாதிரி இருந்தது. ஆகவே வனஜாவின் இதயத் துடிப்பு நின்றுவிட்டதாக அறிவித்தது.

இதயம் நின்றுவிட்டது என்பது இறந்துவிட்டது என அர்த்தமாகும். அந்தவிடயம் அங்கிருந்த அனைவரிடையேயும் பீதியையும், கவலையையும் உண்டாக்கியது. வனஜாவின் தலைவரும், பிள்ளைகளும் புலம்பி அழ ஆரம்பித்தனர். நண்பர்கள், உறவினர்கள் அங்கு கூடிவிட்டனர்.

வனஜாவின் இதயம் நின்றுபோனது என்ற விவகாரம் காடு முழுவதும் பரவியதால், எல்லா மிருகங்களும் துக்கம் விசாரிக்க வனஜாவின் இல்லம் தேடிச்சென்றனர். அவர்களுடன் முயலாரின் பாட்டியும் சென்றிருந்தார்.

பாட்டியார் அங்கு சென்றதும், வனஜா தன் உடலை ஆட்டி, அசைத்து, பெருங்குரலெடுத்து, வேதனையால் அலறிக்கொண்டிருந்ததைக் கண்டதும் பாட்டிக்கு ஆச்சரியமாகவும், புதிராகவும் இருந்தது. இருதய ஓட்டம் நின்றிருந்தால் வனஜா இந்நேரம் இறந்திருக்கவேண்டுமே! அதிகபட்சம் அவள் இன்னமும் உயிருடனல்லவா இருக்கிறாள்!


பாட்டியார் உடனே தன் பேரனான மருத்துவரை ஓர் ஓரமாக அழைத்து, யானையைக் கவனமாகப் பரிசோதித்துவிட்டாயா என வினவினார். அதற்கு ஆம் என்ற ஜூலியை மீண்டுமொருதடவை பரிசோதிக்குமாறு உத்தரவிட்டார்.

வனஜாவுக்கு அருகில் செல்ல ஜூலி மீண்டும் பயந்தது. பாட்டி வலியுறுத்தவே, வேறு வழியின்றி வனஜாவை அணுகி பயந்து, நடுங்கும் கரங்களால் சோதனைக் குழாயை எடுத்து அவள் மார்பில் வைத்தது. இதயம் அடிக்கும் ஓசை அப்போதும் கேட்கவில்லையாதலால் இதயம் நின்றுபோய்விட்டதாக மீண்டும் கூறியது.

இதை அவதானித்தவாறிருந்த பாட்டியின் கண்கள் அகல விரிந்தன. என்ன நடந்திருக்கவேண்டுமென்பதை அப்போதே கண்டுபிடித்துவிட்டாள். ஜூலிக்கு ஏற்பட்டபயம் காரணமாக, ஸ்டெதஸ்கோப்பிலுள்ள காதில் வைத்துக்கேட்கும் Earthpiece என்ற பகுதியைக் காதுக்குள் சொருகாமல் பரிசோதனை நடத்தியிருப்பதுடன், ஸ்டெதஸ்கோப் இன்னமும் ஜூலியின் கழுத்தைச் சுற்றியே இருந்தது. அப்படிப்பட்ட நிலையில் எப்படி இதயத்துடிப்பைக் கண்டறிய முடியும்?

எதையும் வெளிப்படுத்தாத பாட்டி, ஜூலியின் காதுகளுக்குள் ஸ்டெதஸ்கோப்பைச் சரிசெய்து வைத்தபின், திரும்பவும் சோதனைசெய்யுமாறு கோரியது. அப்படிச் செய்தவுடன் இருதயம் அடிக்கும் டிக்... டிக்... டொக்... ஓசை ஜூலிக்குத் தெளிவாகக் கேட்டது.

அது ஒரு சாதாரண வயிற்றுவலியாக இருக்கலாமென்று உணர்த்திய பாட்டி, மூலிகைகளடங்கிய மருந்துக் கலவையைத் தயாரித்து வனஜாவுக்குக் குடிக்கக் கொடுத்தாள். அதைக் குடித்ததும் குணமடைந்த வனஜா சந்தோஷ மிகுதியால் கோஷமிட்டது.



இதனால் மகிழ்ச்சியடைந்த அனைவரும் மருத்துவர் ஜூலிக்கும், அவரது பாட்டியாருக்கும் நன்றி தெரிவித்தனர்.

இவைகளின்பின், வீட்டில் ஜூலியைத் தனியாக அழைத்த பாட்டி, நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும்போது, மிக அவதானமாகவும், விழிப்புடனும், பயத்தை ஒருபோதும் வரவழைக்காமல் செயலாற்றுமாறு புத்திமதி கூறினார்.

ஏற்பட்ட நிலைமையைச் சமாளித்துத் தன்னைப் பாதுகாத்ததற்கும், அறிவுரைகள் வழங்கியமைக்கும் தன் நன்றிகளை ஜூலி பாட்டிக்குத் தெரிவித்ததோடு, இனிமேலும் அவரது அறிவுரைகளை நினைவில் வைத்திருக்கப்போவதாக வாக்களித்தது. அதன்பின் தேடிவரும் நோயாளிகளைக் கவனமுடன் சிகிச்சையளித்து, சிறந்த மருத்துவராகப் பெயர் பெற்றது.



# துருவன்

## அனைத்தும் அறிய வாசிப்போம்


பாடசாலையில் வகுப்பறையில்
படிப்பது மட்டும் படிப்பல்ல.
தேடி நூல்கள் பெறுவதற்கு
நூலகம் உண்டு அறியுங்கள்.

உலகில் எத்தனை அறிஞர்கள்
உண்மைப் பொருளைத் தந்துள்ளார்
எழுத்தில் வடித்தும் வைத்துள்ளர்
எப்பொழுதும் நாம் வாசிக்க...

கண்டதும் கற்றுப் பண்டிதனாய்
வரலாம் என்பது அறியீரோ?
ஆறாம் அறிவு உள்ளவர் நாம்
அனைத்தும் அறிய வாசிப்போம்.

வளமாய் வாழ்ந்திட வாசிப்போம்
உலகைத் தெரிந்திட வாசிப்போம்
இருப்போர் இடத்தில் யாசிப்போம்
அறிந்ததை வைத்து யோசிப்போம்.

-கிருபா.



## சரியாய் எழுது

இளமையில் கல்வி
சிலையில் எழுத்து
அதையும் தமிழில்
வடிவாய் எழுது.
அனைவரும் விளங்கத்
தெளிவாய் எழுது.
எழுதும் பொழுது




நல்லன எழுது.
கருத்தை அதனுள்
பொதிந்தே எழுது.
ஆர்வமாய் உள்ளோர்
படித்திட எழுது.
ஆகையால் அதனைச்
சரியாய் எழுது.

-மாருதி



## தண்டிக்கப்பட்ட விஞ்ஞானிகள்

- பூமி தன்னைத்தானே 24 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை சுற்றுகிறது. அத்தோடு வருடத்துக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிவருகிறது என்ற உண்மையை உலகுக்குத் தந்தவர் நிக்கலஸ் கொப்பர்நிக்கஸ் ஆவார். இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர்.
- ஆண்ட்ரியஸ் வெசாலியஸ் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். இவர் ஒரு உடற்கூறு இயல் நிபுணர். ஒருவருக்கும் தெரியாமல் பிணத்தை எடுத்து அறுத்து மனித எலும்புக்கூட்டை முதன் முதலில் மக்களின் பார்வைக்கு வைத்தவர். இதனால் இவருக்கு மரணதண்டனை பரிசாகக் கிடைத்தது.
- வானவியல் நிபுணரான ஜியார்டனோ புரூனோ என்பவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய கருத்துகள் மதக் கோட்பாடுக்கு எதிரானதாக இருந்ததால் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டார்.
- பரிசோதனை மூலம் எதையும் உறுதிசெய்ய வேண்டும் என்று கூறியவர் கலிலியோ கலிலி. இவர் இத்தாலியில் பிறந்தவர். இவரே வான்வெளிக் கடிகாரத்தைக் கண்டுபிடித்தார். இவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு 352 ஆண்டுகளின் பின்னரே தீர்ப்பு வழங்கப்பட்டது.



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தை பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

திகதி ............ ஒப்பம் ............

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம் ............

# இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- றொனாசா பிறேமதாஸ்
தரம் :- 10
பாடசாலை :- யா/நெடு.றோ.க. மகளிர் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்

பெயர் :- குணரத்தினம் மதுஷன்
தரம் :- 05
பாடசாலை :- யா/கட்டைவேலி யா.வி.வி
ஆர்வமுள்ள துறைகள் :- புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல்.

பெயர் :- சயலா கவீந்திரன்
தரம் :- 08
பாடசாலை :- யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- கதை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

பெயர் :- மனோராஜன் லக்ஸ்மன்
தரம் :- 06
பாடசாலை :- யாழ்.வட்டு.மத்தியகல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- முத்திரை சேகரித்தல், விளையாட்டு.

பெயர் :- சஞ்சிகா சோதிலிங்கம்
தரம் :- 08
பாடசாலை :- யா/மகாஜனக் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- கதை வாசித்தல்,நடனம் -ஆடுதல்

பெயர் :- பேர்னாட்ஷா கபில்ராஜ்
தரம் :- 03
பாடசாலை :- யா/நெடு.அ.த.க. வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- ஆங்கிலம் படித்தல், புத்தகம் வாசித்தல், சித்திரம் வரைதல்.

பெயர் :- நிவிதா முருகேசு
தரம் :- 03
பாடசாலை :- மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டு, பத்திரிகை சேகரித்தல், நாடகம் பார்த்தல்.

பெயர் :- கலைவாணி ஆறுமுகம்
தரம் :- 06
பாடசாலை :- இடைக்காடு மகாவித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- முத்திரை சேகரித்தல், விளையாடுதல்.

பெயர் :- றேனுகாசாளினி லோறன்ஸ்
தரம் :- 09
பாடசாலை :- புனித.சாள்ஸ் மகாவித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பாட்டு, நாடகம்.

பெயர் :- அறுக்காஞ்சி மக்லின்
தரம் :- 07
பாடசாலை :- யா/கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்



# தங்கத் தூரங்கம்

கடற்கரையைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்த அன்னப் பறவைக் கூட்டம் ஒன்றைத் தனிமையில் இருந்த காகம் ஒன்று பார்த்தது. அவை ஒரேமாதிரி சீராகப் பறப்பதைப் பார்த்ததும் காகத்துக்கு வெறுப்பு வந்தது.

"எல்லோரும் ஒரேமாதிரிப் பறக்கிறீர்களே...? என்னைப் போல் இறக்கையை அடித்த வாறு உங்களால் பறக்க முடியுமா...? குட்டிக்கரணம் அடிப்பீர்களா...? மேலிருந்து கீழ் நோக்கி வேகமாகப் பாய்ந்து பறக்க முடியுமா...?" என்று ஒரு அன்னப்பறவையிடம் காகம் வலியச் சென்று கேட்டது.



துணிச்சலான அந்த அன்னப்பறவை காகத்தின் அருகே வந்து "நண்பா! இந்தச் சாகசத் துக்கும் மேலே, வாழ்க்கை இருக்கிறது" என்று அடக்கமாகச் சொன்னது.

"அதெல்லாம் யாருக்கு வேண்டும். என்னைப்போல் உன்னால் பறக்க முடியுமா...? வேண்டும் என்றால் இருவரும் பந்தயம் வைத்துக்கொள்வோம். பறப்பது என்றால் எப்படி என்பதை உனக்குச் சொல்லித் தருகிறேன்" என்று காகம் தற்பெருமை அடித்துக்கொண்டது.

இனிமேல் பேசாமல் இருந்தால் காகம் தன்னைப் பல வீனமாகக் கருதிவிடும். எனவே அதனுடன் போட்டி போடுவதே நல்லது என்ற முடிவுக்கு வந்த அனனப்பறவை, "சரி, போட்டிக்கு நான் தயார்..." என்றது.

முதலில் காகம் தனது சாகச பறக்கும் பயணத்தைத் தொடங்கியது. வில்மாதிரிப் பறந்து காட்டியது. விர் விர் என்று வட்டமடித்தது, மேலும் கீழும் சர்ரென்று பறந்து, அன்னப் பறவையை ஏளனமாகப் பார்த்தது.

"சரி, எனது சாகசத்தை நீர் பார்க்க வேண்டாமா...? என்னுடன் வா...?" என்று காகத்தை அழைத்துக்கொண்டு தனது சாகசத் தைக் காட்டத் தொடங்கியது அன்னப் பறவை.

அன்னப்பறவை நீண்டதூரம் பறக்க ஆரம்பித்தது. கடல் நடுவே வெகு தொலைவில் அன்னப்பறவை பறந்து கொண்டிருந் தது. காகமும் அதன் பின்னாலே வேகமாகப் பறந்தது.

ஆனால் நேரம் செல்லச்செல்ல காகத்தால் அன்னத் தைப் பின்தொடர இயலவில்லை. திணறியது. எந்தப் பக்கம் பார்த்தாலும் கடல் நீர்தான் அதன் கண்களுக்குத் தென்பட்டது. ஆனால் அன்னமோ கொஞ்சங்கூடக் களைப்பே இல்லாமல் தொடர்ந்து பறந்தது.

ஒரு கட்டத்தில் காகத்தால் பறக்க இயலவில்லை. மிகவும் தாழ்வாகப் பறக்க ஆரம்பித்தது.

அதைப் பார்த்ததும் அன்னம் கேட்டது, "நண்பா... ஏன் இவ்வளவு தாழ்வாகப் பறக்கிறாய்...?"

அப்போது காகம் சொன்னது: "நண்பனே... எனது கர்வத்தால் நான் அழியப்போகிறேன். இப்போது எனக்குப் பறக்கும் திறன் குறைந்துகொண்டே வருகிறது. இன்னும் சிறிது நேரத்தில் நான் நீரில் மூழ்கி இறந்து விடுவேன். இறைவன் உனக்கு நீண்டதூரம் பறக்கும் ஆற்றலைக் கொடுத்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டேன்."

கர்வம் கொண்ட காகம் திக்குத் திசை தெரியாமல் கரைக்கும் திரும்பமுடியாமல் கடலுக்குள் விழுந்து மூழ்க ஆரம்பித்தது.

# பசியைத் தந்த இறைவன்

ஒரு கிராமத்தில் ஒரு குருவும் நான்கு சீடர்களும் தங்கியிருந்தார்கள். குரு சிலவேளை மக்கள் வாழும் பகுதிகள் ஊடாகச் செல்வார். சீடர்களும் செல்வார்கள். குரு மக்களைக் காணும் சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குவார். அவர்களுக்குள் ஏதாவது பிணக்குகள் இருந்தால் அவற்றைப் பேசித் தீர்த்து வைப்பார். சீடர்களும் உதவுவார்கள். மக்கள் அவர்களுக்கு உணவுவகைகளைக் கொடுத்து, தங்கள் நன்றியைத் தெரிவிப்பது வழக்கமாகியிருந்தது.

ஒருநாள் நடந்துகொண்டே இருந்தார்கள். ஒருவரும் சந்திக்கவில்லை. பசியோ அவர்களைச் சாப்பிடுவதாக இருந்தது. தலைசுற்றியது. குருவோ அதைப்பற்றி எள்ளளவும் சிந்திக்கவில்லை. கடைசியில் தமது இருப்பிடத்துக்கு வந்துவிட்டார்கள்.


இரவும் வந்தது. வழமைபோல எல்லோரும் படுக்கைக்குத் தயாரானார்கள். படுக்கப் போகுமுன்னர் அன்று இறைவன் தமக்களித்த உதவிகளைக் குறித்து நன்றி கூறிவிட்டே படுக்கைக்குச் செல்வது குருவின் வழக்கம். அன்றையதினம் இறைவனுக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறார் என்பதை சீடர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

வழமைபோலவே, "இறைவா! இன்றைய நாள் நீர் எமக்கு உதவியதற்கு நன்றி!" என்று கூறிவிட்டு உறங்கச் சென்றார். இதைக் கவனித்த சீடர்கள், மனதுள் ஆத்திரம் பொங்க, "ஐயா! இன்று எமக்கு ஆகாரம் எதுவுமே கிடைக்கவில்லை. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. அப்படியிருக்க இறைவனுக்கு நன்றி சொல்கிறீர்களே? என்ன விந்தையாக இருக்கிறது" என்றனர். குருவோ கவலைப்படாமல் "அன்பானவர்களே! இறைவன் வழமைபோலவே எமது தேவையை உணர்ந்து தரவேண்டியதைத் தந்திருக்கிறார்!" என்றார். சீடர்கள் விழித்தனர். குருவுக்கு மனநோய் ஏற்பட்டுவிட்டதா எனச் சந்தேகப்பட்டனர். "ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்று வருந்திக் கேட்டனர்.


"இன்று இறைவன் எமக்குப் பசியைத் தந்திருக்கிறார் அல்லவா?" என்ற குருவின் உபதேசத்தோடு அனைவரும் கண்ணயர்ந்தனர்.

# வரைந்து பாருங்கள் வர்ணம் தீட்டி மகிழுங்கள்






### கேள்விக்குறியிட்ட பகுதிக்குப் பொருத்தமான கழுத்துப்பகுதி எது?



# முயற்சித்துப் பாருங்கள்



1. அப்பாவிடம் விஜி ஒரு கேள்வி கேட்டாள். ''அப்பா! நேற்று எங்கள் வகுப்பு ஆசிரியர் ஒரு கணக்குக் கேட்டார். எனக்குச் சிறிது மயக்கமாக இருக்கிறது. விளக்கமாகச் சொல்வீர்களா?'' ''கேளம்மா. எனக்கும் தெரிந்தால் நிச்சயமாகச் சொல்கிறேன்'' என்றார் அப்பா. ''நான் கொஞ்சப் பணம் வைத்திருக்கிறேன். மாமா எனது பிறந்தநாளுக்காக 36 ரூபா தந்தார். இப்போது நான் வைத்திருக்கும் பணத்தில் அரைப்பங்கை அக்கா பறித்துவிட்டாள். நான் ஆரம்பத்தில் வைத்திருந்த பணத்தின் இரண்டு மடங்கு இப்பொழுது என்னிடத்தில் உண்டு. என்னிடம் இப்பொழுது உள்ள பணம் எவ்வளவு?''

அப்பாவை யாரோ அழைக்க அவர் வெளியே சென்றுவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்தி இதற்கான விடையைக் கூறுங்களேன்.

2. அம்மா வேலைக்குப் போவாள். நேரமாகிவிட்டது. பிள்ளைகளுக்கு ரொட்டி சுட்டு வைக்கமுடியவில்லை. 3 பிள்ளைகளுக்கும் ரொட்டிக்கான மாவைப் பிசைந்து உருண்டைகளாக்கி வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

மூத்தமகன் ரமேஷ் வந்தான். சில உருண்டைகளை தட்டி ரொட்டியாக்கிச் சாப்பிட்டான். இரண்டாவது மகன் பிரகாஷ் மிகுதியான உருண்டைகளை பாதிபாதியாக உருட்டி (இரண்டாக்கி) அதில் சிலவற்றைச் சுட்டுச் சாப்பிட்டான்.

மூன்றாவது மகன் வினோத் மிகுதியாக இருந்த உருண்டைகளை மூன்று மூன்றாகப் பிரித்துத் தட்டி, சுட்டுச் சாப்பிட்டான். இப்போது மாவுருண்டைகள் மிகுதியாக இல்லை. மூவரும் ஒரேயளவு ரொட்டிகளையே சாப்பிட்டதாகத் தாயிடம் கூறினர்.

இப்போது ஆரம்பத்தில் அம்மா எத்தனை உருண்டைகள் வைத்தார் என்பது தெரியவில்லை.

உங்களால் கண்டுபிடிக்கமுடியும். முயற்சி செய்து பாருங்கள்.






# உங்கள் கைவண்ணம்



அ.மக்லின்,
தரம் - 07,
யா/க.றோ.க.ஆ.பாடசாலை.




சு.வரோதயன்,
தரம் - 07,
யா/சந்திரமௌலீசா வித்தியாலயம்.




அ.மக்லின்,
தரம் - 07, யா/கலட்டி.றோ.க.ஆ.பாடசாலை.




ஞா.ஞானறொபின்சன்,
தரம் - 07, யா/கலட்டி.றோ.க.ஆ.பாடசாலை.

# விடுகதைகளும் விடைகளும்

1. ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது. -அது என்ன?
2. வெளிச்சத்தில் தொடர்வான் இருட்டில் மறைந்திருப்பான். -அவன் யார்?
3. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு. -அவன் யார்?
4. அம்மா வாங்கி வந்த பசுவுக்கு வயிற்றிலே கொம்பு. -அது என்ன?

**விடைகள்**

1. ஊஞ்சல் 2. நிழல் 3. கலண்டர். 4. கேத்தல்.

மகேந்திரன் சிவகௌரி
தரம் – 07
யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.

# சிந்தனைக்கு

ஓர் இளைஞனால் எட்டிப்பிடிக்க முடியாத உயரங்கள் என்று எதுவுமே இல்லை. அந்த உயரத்தை அடைவதற்கு வேறு எங்கும் செல்ல வேண்டியதும் இல்லை. எல்லாம் உனக்குள்தான் இருக்கின்றது.

விவேகானந்தர்.

படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுள் நுழையக்கூடாது. மனிதன் உலகத்தில் வாழலாம். ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக்கூடாது.

- இராமகிருஷ்ணர்.

நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது என்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பதுதான் அரிது.

- சுதே.

காட்டில் வாழும் விலங்குகளைப் போல கொடிய குணங்கள் உடையவர்களை நாட்டில் வாழ வைத்திருந்தாலும் அவர்கள் நல்லவர்களாக வாழ மாட்டார்கள்.

- முன்னுறையரையனார்.

ப.நவீதா
தரம் - 06
உடுவில் மகளிர் கல்லூரி.

# பொது அறிவு


01. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
திரு.ஆனந்தசமரக்கோன்
02. இலங்கையின் தேசிய மரம் எது?
நாகமரம்
03. இலங்கையின் தேசிய மலர் எது?
நீலோற்பலம்
04. இலங்கையின் தேசிய பறவை எது?
காட்டுக்கோழி
05. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
கரபந்தாட்டம்.
06. இலங்கையின் புனித மரம் எது?
வெள்ளரசு
07. இலங்கையின் முதல் பெண் பிரதமர் யார்?
திருமதி.ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா
08. இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?
1948.02.04
09. இலங்கையில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
09
10. இலங்கையின் சிறப்புப் பெயர் என்ன?
இந்து சமுத்திரத்தின் முத்து

ஆ.அபிராமி
தரம் – 03
யா/சுப்பிரமணிய வித்தியாலயம்.

# பெரிய சகோதரர்

முன்னொரு காலத்தில் ஒரு சிங்கம் தன் குடும்பத்தவருடன் காட்டில் வாழ்ந்து வந்தது. அது உணவு வேட்டைக்காக வெளியே சென்றிருந்த வேளை, பெண் சிங்கம் தன் இரண்டு குட்டிகளுடன் குகையில் தங்கியிருந்தது.






ஒரு மழை நாளன்று, அந்தச் சிங்கம் ஒரு நரிக்குட்டியை இல்லத்துக்குக் கொண்டு வந்தது. அது பெண் சிங்கத்திடம் இந்த, அற்பப் பிராணியைக் கொல்வதற்கு தன் மனம் இடம் தரவில்லை என்பதால் அதை உயிருடன் கொண்டு வந்ததாகக் கூறியது. பெண் சிங்கமும் அந்த நரிக்குட்டியைக் கொல்லாதிருந்ததுடன் தங்களில் ஒருவராகச் சொந்தமாக்கி வளர்த்துப் பெரியவனாக்கவும் தீர்மானித்தது.

மூன்று குட்டிகளும் சகோதரர்களாக வளர்ந்து வந்தன. இருந்தாலும், அம்மூவரிலும் நரிக்குட்டி மூத்தவராக இருந்ததால் அது அடிக்கடி தானே பெரியவர் என்ற எண்ணத்துடன் இருக்க முயன்றது. இதை அதிகம் விரும்பாத சிங்கக் குட்டிகள் அமைதியைக் கடைப்பிடித்தன. ஏனென்றால் அவர்களது தாய் அவர்களிடம் பெரிய சகோதரர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று சொல்லிக் கொடுத்திருந்தாள்.





ஒரு சமயம், மூவரும் ஒரு சிறிய நீரோரைடக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு யானை தம்மை அணுகி வருவதைக் கண்டன. அதைப் பயமுறுத்துவதற்கான பாசாங்குத் தாக்குதலை மேற்கொள்ள சிங்கக் குட்டிகள் உடன் தயாராகின. ஆனால் நரிக்குட்டியோ அதற்குப் பயந்து அவைகளையும் ஓடி விடுமாறு பணித்தது.



நாம் ஏன் ஓட வேண்டும் என சிங்கக் குட்டிகள் சகோதரரான நரிக்குட்டியிடம் வினாவின. அவர்களது கீழ்ப்படியாமைக்காகக் கோபமடைந்த நரிக்குட்டி அவர்களுக்கு அடித்தது.





வீடு சென்ற சிங்கக் குட்டிகள் நரிக்குட்டியார் பற்றித் தங்கள் தாயாரிடம் முறையிட்டன. இதைக் கேட்ட சிங்கம் கோபங் கொண்டு மீண்டும் அவைகளுக்கு அடிக்க தன் பாதத்தை உயர்த்தியது. பெண் சிங்கம் அதைச் சமாதானப்படுத்த முயன்றது. ஆனால் நரிக்குட்டி அதைக் கேட்க விரும்பவில்லை. தன்னைக் குறைவாக மதித்து எவரேனும் சிரிப்பதைத் தான் விரும்பவில்லை என்றது.

தன்பிள்ளைகளை அப்பால் அனுப்பிய பெண் சிங்கம் நரியின் பக்கம் திரும்பி, நீ ஒரு நரிக்குட்டி என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதுவுமல்லாமல் என் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானதும், அவர்களுக்கு அடித்ததற்காக உன்னைப் பழிவாங்கவும் செய்வார்கள். எனவே, இப்பொழுதே உன் சொந்தக் குடும்பத்த வரிடம் ஓடிப்போய்ச் சேர்ந்து கொண்டுவிடு எனப் புத்திமதி கூறுகிறேன் என்றது. இதைக் கேட்டுக்கொண்டிருந்த நரிக்குட்டி பெண்





சிங்கத்துக்கு நன்றி தெரிவித்துவிட்டு, சிங் கக் குட்டிகள் திரும்பி வருவதற்குள் குகையிலி ருந்து ஓடித் தப்பியது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

உங்களைப் பற்றித் தாழ்வாகப் பேசவேண்டாமே. எப்படியும் உங்கள் நண்பர்கள் அதைச் செய்யப்போகிறார்கள் அல்லவா?

- யாரோ -

## நமது நோக்கு

# ரணில் - மகிந்த விஜயங்களும்... அவை கூறும் விடயங்களும்...

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவரும் தாங்களும் யாழ்ப்பாணத்துக்கு பிரசார நடவடிக்கைகளுக்காகச் சென்றோம் என்பதைப் பதிவு செய்துகொள்வதற்காக வந்துபோயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ரணில் வந்து சென்றார்.

நேற்று மகிந்த ராஜபக்ஷவும் 'நானும் விட்டேனா பா' என்று குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுவிட்டுச் சென்றுளளார்.

இவர்களின் வருகை குறித்து குடாநாட்டு மக்கள் எந்தவிதமான அக்கறையையும், ஆர்வத்தையும் காட்டவில்லை என்ற முக்கியமான ஒரு செய்தி ஒருபுறமிருக்க, அவர்களுக்கும் யாழ்.குடாநாட்டு மக்களைச் சந்திக்கவோ, அவர்களிடம் இயல்பாகப் பேசவோ, தேர்தலில் தனக்கு ஆதரவு வழங்குமாறு கோரவோ துணிச்சல் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

அந்த அளவுக்கு தமிழ் மக்களுக்கு அவர்கள் கடந்த காலங்களில் செய்த சேவையின் தரம் உள்ளது என்றால் மிகையில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய காலத்தில் போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் சமாதானத்திற்கான தளம் அமைக்கப்பட்டதாகவும், அதனடிப்படையில் இராணுவ ரீதியிலான இழப்புகள் தடுக்கப்பட்டு ஆயுதப் படையினரின் வலுவைப் பலப்படுத்த முடிந்ததாகவும், இராணுவத்தினருக்கு இதுவரை கிடைக்காத பல உதவிகள் பல்வேறு நாடுகளில் இருந்தும் கிடைத்துள்ளதாகவும் கூறி பெருமைப்பட்டுள்ளதுடன் - எதிர்காலத்திலும் படைத்தரப்பினருக்கு பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்களை மேலும் நவீன மயப்படுத்தப்போவதாகவும் பலாலி இராணுவத் தளத்தில் பேசும்போது கூறியுள்ளாராம்.

இது படைத்தரப்பினர் - இராணு அதிகாரிகளின் முன்னிலையில் பேசிய பேச்சாக இருந்தாலும் - அவர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கில் உரையாற்றிய விடயமாக இருந்தாலும் - இனப்பிரச்சினைக்கான தனது தீர்வு எப்படியானதாக இருக்கும் என்பது குறித்தோ, தமிழ் மக்களுடனான உறவுகளைப் படைத்தரப்பு எப்படி மனிதநேய அடிப்படையிலும் ஜனநாயகப் பண்புடனும் அனுகவேண்டும் என்பது குறித்தோ அவர் எதனையும் கூறவேயில்லை.

அவருடைய பேச்சு இராணுவத்தினருக்கு அவர்களின் பலம், வளம் குறித்த நம்பிக்கைகளையே ஏற்படுத்தியுள்ள சூழலில் அதனூடாக எதிர்கால யுத்தமொன்றிற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்ள படையினர் நவீனமயப் படுத்தப்படவுள்ளனர் என்ற செய்தியையும் கூறுவதாகவே உள்ளதெனலாம்.

எனவே, குடாநாட்டுக்கான ரணிலின் விஜயமானது படைத்தரப்பினருக்கான நம்பிக்கையூட்டும் செய்திகளை மட்டுமே சுமந்துவந்துள்ள அதேசமயம் - குடாநாட்டு மக்களுக்கு மேலும் குழப்பத்தையும் பீதியையும் மட்டும் ஏற்படுத்தும் அச்சுறுத்தலை மட்டுமே கொண்டுவந்துள்ளதெனலாம். இராணுவத்தைப் பலப்படுத்துதல் என்பது சமாதானத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவும், போருக்கான தயார்ப்படுத்தலாகவும் அர்த்தப்படும் என்பதை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தேயுள்ளனர்.

ரணிலும் சரி, மகிந்த ராஜபக்ஷ அவர்களும் சரி, படைத்தரப்பினர்க்கு உற்சாகமும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் அளவுக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் விருப்பார்வம் கொண்டவர்களாக இல்லை.

மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவிக்கும் அவரது சிந்தனைகள் வெளிப்படையாகவே தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் அவர்களின் அபிலாஷைகளையும் முற்றாக நிராகரிப்பதாகவே உள்ளது.

வெறுமனே சமாதானம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு, என்ற வார்த்தைகளை அடிக்கடி பிரயோகிப்பதில் எந்த விதமான அர்த்தமும் இருக்கப்போவது கிடையாது. அது தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் பேய்க்காட்டி ஏமாற்ற சிங்கள இனவாத தலைமைகள் காலம் காலமாக கையாண்டுவரும் அரசியல் சூழ்ச்சியுத்தியேயாகும்.

முதலில் இராணுவ ஆக்கிரமிப்பு வலயங்களுள்ளும், உயர்பாதுகாப்பு வலயங்களுள்ளும் மக்களின் - தமிழ் பேசும் மக்களின் - அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை சிறைப்படுத்திவைத்துக்கொண்டு ஜனநாயகம் பற்றியும், தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமைபற்றியும் பிரஸ்தாபிப்பதை விடவும் கோமாளித்தனம் எதுவுமில்லை.

வெறும் வாக்குறுதிகளுக்கு மாற்றீடாக மக்களின் வாக்குகளைக் கோருவதில் உள்ள அரசியல் தந்திரம் தமிழ் பேசும் மக்களுக்கு புரியாத ஒன்றேயல்ல.


எனவேதான் இந்தத் தென்பகுதி சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்கள் குறித்தும், அவர்களின் வட பகுதிக்கான விஜயங்கள் குறித்தும் தமிழ் மக்கள் அலட்டிக்கொள்வதில்லை. தங்களின் அபிலாஷைகள், உரிமைகள் தொடர்பாக இந்தத் தலைவர்கள் இராணுவப் பார்வையையே பார்க்கிறார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிவர்.

எனவே ஜனாதிபதித் தேர்தலோ, நாடாளுமன்றத் தேர்தலோ அவர்களின் அரசியல் - வாழ்வியல் விடியலுக்கான எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பதை தமது கடந்த காலப் பட்டறிவின் மூலம் உணர்ந்துள்ளதால் தங்களது விடிவுக்கான பாதையில் சிந்திக்கவும், செயற்படவும் தொடங்கி வெகுகாலமாயிற்று என்பதை தென்பகுதி அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்

செய்தி:-ஜே.வி.பியினரின் அபத்தமான பேச்சுக்களால் மகிந்த ராஜபக்ஷ நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.



## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# நீண்ட தூரம் நடந்து சோதனைகள் தாண்டி ஜனாதிபதிக்கு வோட்டுப் போடவேண்டுமா?

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகத்திலுள்ள மக்கள், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 500 மீற்றர் தூரத்துக்குச் சென்றுதான் வாக்களிக்கவேண்டும். இவர்களுக்கெனத்தனியான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இந்த நிலையங்களில் தென்னிலங்கையிலிருந்து வந்திருக்கும் சிங்களத் தெரிவத்தாட்சி அதிகாரிகளும், ஊழியர்களுமே பெரும்பாலும் கடமையில் இருப்பார்கள். இங்கு சென்று தங்கள் அடையாளங்களை உறுதிப்படுத்தி வாக்களிக்கவேண்டும். இதற்கு முன் இந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவதற்கு பாதுகாப்புப் படையினரின் சோதனைகளுக்குட்பட வேண்டும். இதன்பின்தான் வாக்களிக்கவேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டு வாக்களித்துத் தெரிவு செய்யப்படுபவர் ஜனாதிபதியாக வந்து எமக்கு என்ன செய்யப் போகிறார்? என்று கேட்டபடி வந்த மார்ந்தார் நண்பர் பரமசிவம்.

பாதுகாப்புப் படையினரின் சோதனைகள் எல்லாம் தாண்டி நடந்து போய் வாக்களிப்பு நிலையத்தில் அங்கிருப்பவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவற்றை விளங்கிக் கொண்டு பதிலளித்து வாக்குச் சீட்டுக்களைப் பெறுவதற்கு நிற்கும்போது ஏற்கனவே வேறு யாரோ வாக்களித்துவிட்டதாகச் சொன்னால் எப்படி இருக்கும்? இப்படியான சம்பவங்கள் முன்னைய தேர்தல்களில் நடந்த அனுபவம் எனக்கு இருக்கிறது, உமக்கு இருந்ததுண்டா? என்று கேட்டேன்.

எனக்கும் இருக்கிறது. கடந்த தேர்தலில் வாக்களிக்கச் சென்ற மக்களுக்கு தமது நிர்வாகப் பகுதியில் விடுதலைப் புலிகள் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இதைத்தான் சங்கரியார் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கள்ள வாக்குகள் போட்டார்கள் என்று சொல்லித்திரிகிறார். தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களிருவரும் எதையும் உருப்படியாகச் சொல்லவில்லை. கடற்கோளால் பாதிக்கப்பட்டு இன்று மழையிலும், வெள்ளத்திலும், கூடாரங்களிலும், ஓலைக் கொட்டில்களிலும் அவதிப்படும் மக்களுக்கு வெளிநாடுகள் மனம் இரங்கிக் கொடுத்த நிவாரண உதவிகளைக் கொடுப்பதற்குகூட, அதற்கென அமைக்கப்பட்ட கட்டமைப்பைக் கூடச் செயற்படுத்துவதற்கு மஹிந்த விரும்பவில்லை. இந்த நிலையில் இவ்வளவு கஷ்டப்பட்டு நாங்கள் போய் வாக்களிக்க வேண்டுமா? என்று பரமசிவம் கேட்டார்.

உனது நண்பர்கள் யார் என்று சொன்னால் உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ளுவேன் என்று ஒரு பெரியவர் சொன்னார். அதாவது ஒருவருடைய நண்பர்கள் எப்படிப்பட்டவர்களென்று தெரிந்தால் அவரைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளலாம். அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு தேர்தலில் போட்டியிடும் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன் ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் சில தனியார் ஊடகங்கள் பற்றிக் கவலையுடன் பேசினார். இந்த ஊடகங்கள் தன்னை ஒரு இனவாதியாகச் சித்தரிக்கின்றன என்று கவலையுடன் சொன்னார். நான் இனவாதியல்ல, இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களை என்றும் நேசிக்கின்றேன். என்னை இனவாதியாகச் சித்தரிக்கும் ஊடகங்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பேன் என்று மஹிந்த பேசியிருக்கிறார். மஹிந்த இனவாதியில்லாமலிருக்கலாம். அவர் சொல்வதையும் நம்புவோம்.

ஆனால், இவர்களுடைய நண்பர்கள் யார்? எந்த நண்பர்களுடன் சேர்ந்து கூட்டு வைத்திருக்கிறார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் சில மனம் இரங்கி நிவாரண உதவியாகக் கொடுத்தவைகளைக் கொடுத்தால், நாடு பிளவுபட்டுவிடும் என்று சொல்லிஅதைக் கொடுக்காமல் தடுத்த ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் இந்த உதவிகளைக் கொடுப்பதில்லை என்ற நிபந்தனையை ஏற்று ஒப்பந்தம் செய்திருக்கிறார். இவருடைய நண்பர்களை அறிந்து கொள்ளும்போது இவரைப் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறதல்லவா? என்று சொன்னேன்.

அடுத்து ரணில் விக்கிரமசிங்க - போர்நிறுத்தத்தைக் கொண்டுவந்தார், சமாதானப் பேச்சுக்களை நடத்தினார், தன்னாதிக்க அதிகார சபையை அடிப்படையாக வைத்துப் பேச்சைத் தொடரலாமா என்றெல்லாம் யோசித்தார். ஆனால், அவசரகால நிலை பிரகடனப்படுத்தியதால், இன்று தினமும் பாதிப்புக்குள்ளாவது தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தான் என்பதை நன்கறிந்திருந்தும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கு ரணிலும் ஒப்புதல் அளித்தாரே! இவரை எப்படித் தமிழ் மக்கள் நம்ப முடியும்? என்று நான் கேட்டேன்.

அதிகாரப் பரவலாக்கல் என்கிறார்கள், சமஷ்டி என்கிறார்கள், சமாதானப் பேச்சு என்கிறார்கள், ஒற்றையாட்சியில் அதிகாரப் பகிர்வு என்கிறார்கள். கடந்த ஐம்பதாண்டுகளில் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டங்கள், செய்த தியாகங்கள், அவற்றினால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியெல்லாம் இன்னமும் சிங்களத் தலைவர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இதர சமூகங்களையும் சேர்த்து என்ன முறையில் எப்படி வாழலாமென்று ஒரு வழிகாணமுடியாதா?

உலகில் இது போன்ற பிரச்சினைகள் அமைதியாகத் தீர்க்கப்பட்டிருக்கும் நாடுகளைப் பின்பற்றி ஒரு வழி தேடமுடியாதா? மலேஷியாவும் சிங்கப்பூரும் அமைதியாகப்பிரிந்து தனித்தனி சுதந்திர நாடுகளாக வளம் பெற்று வாழ முடியவில்லையா? செக்கோஸ்லாவாக்கியாபிரிந்து செக் என்றும் ஸ்லோவாக் என்றும் அமைதியாக வாழ வில்லையா? கிழக்குத் திமோர் போராட்டத்தின்பின் சுதந்திரமாக வாழமுடியவில்லையா? நமீபியா பெரும் போராட்டத்தின்பின் விடுதலை பெற்று வாழவில் லையா? இன்னும் இப்படி எத்தனை நாடுகள் உலகில் சுதந்திரமாக அண்டை நாடுகளுடன் நட்புறவுடன் ஒற்றுமையாக வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

இங்கும் ஏன் சிங்களமும், தமிழும் தனித்தனி அரசுகளாக வாழ முடியாது. ஒற்றையாட்சி, ஐக்கிய இலங்கை என்று சொல்லிக் கொண்டு எந்நாளும் மக்கள் பிளவுபட்டுக் குமுறிக் கொண்டுதான் வாழ வேண்டுமா? சிங்களத் தலைவர்கள் இதை எப்போது சிந்திக்கப்போகிறார்கள் என்று கேட்டபடி நடந்தார் பரமசிவம்.

# ஜனாதிபதித் தேர்தல்

# சிங்களத் தலைவர்களின் அரசியல் நகர்வுகளும்; தமிழ் மக்கள் எடுக்கவேண்டிய உறுதியான நிலைப்பாடும்...

**27 வருடங்களாக தமிழர் தலைவர்கள் உரிமைக்குக் குரல் கொடுத்தபோதெல்லாம் அடி, உதை, அழிப்பு, கொள்ளையடிப்பு இவைகளே பலனாகக் கிடைத்தன. இப்படிப்பட்ட கொடுமைகள், அட்டூழியங்களெல்லாம் நடை பெற்றவேளை, பிராந்திய வல்லரசு, சர்வதேச வல்லரசுநாடுகள், ஐரோப்பிய யூனியன் முதலிய நாடுகளின் தலைவர்கள் எல்லாம் நன்றாகத்துயின்று கொண்டிருந்தனர் போலும். இவைகள் யாவும் பயங்கரவாதச் செயல்களாக அவர்களுக்குத் தென்படவில்லை.**

1930 ஆம் ஆண்டளவில் ஜே.ஆர். ஜெயவர்த்தன அன்றிருந்த அரசாங்க சபையில் தனிச் சிங்கள மொழியை ஆட்சிமொழியாக்கப் பிரயத்தனம் செய்த பொழுது, அன்று இடது சாரிக் கொள்கையுடையவராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க - சமஷ்டிக் கொள்கைக்காகக் குரல் கொடுத்து, தனிச் சிங்களக் கோரிக்கையைக் கடுமையாக எதிர்த்திருந்தார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சரவையில் ஸ்தலஸ்தாபன அமைச்சராக இருந்த பண்டாரநாயக்க, சேனநாயக்கவுக்குப் பின் பிரதமர் பதவிக்கு இலக்கு வைத்துக் கொண்டிருந்தார்.

வயோதிபத்தை அண்மித் திருந்த சேனநாயக்க - தனக்குப் பின் தனது மகன் டட்லியைப் பிரதமராக்குவதற்குத் திட்டங்களை வரைந்து கொண்டிருந்ததை தன் கழுகுக் கண்களால் கூர்மையுடன் அவதானித்துக் கொண்டிருந்த பண்டாரநாயக்க - 1950 ஆம் ஆண்டுகளில் ஐ.தே.கட்சியை விட்டு வெளியேறி, இனவாதக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கி, சிங்களம் மட்டும் சட்டக் கொள்கைப் பிரகடனத்துடன் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

1952 ஆம் ஆண்டு - சிறிலங்காவின் முதற் பிரதமர் சேனநாயக்க, குதிரையால் வீழ்ந்து மரணமானதைத் தொடர்ந்து, அவருடைய மகன் டட்லி சேனநாயக்க பிரதமரானார். இவர் பதவியேற்ற பின், அரிசி விலை ஏற்றப்பட்டது. அதனை எதிர்த்து அரச ஊழியர் பொது வேலை நிறுத்தம் ஒன்று நடைபெற்றது. அந்தவேளை பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் அரச ஊழியர் கந்தசாமி என்பவர் உயிரிழந்தார். இதனால் நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி, டட்லி சேனநாயக்கவின் மாமனாரான சேர்.ஜோன் கொத்தலாவல டட்லியை வெளியேற்றி, தான் பிரதமரானார். பிரதமரான சேர்.ஜோன் கொத்தலாவல ஓர் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதியாவார்.

அரசியலுக்கும், இவருக்கும் வெகு தூரம். இவர் இந்தக் காலத்தில் யாழ். குடாநாட்டுக்கும், தீவுப் பகுதிக்கும் விஜயங்களை மேற்கொண்டார். நெடுந்தீவுக்குச் சென்றபோது, மக்கள் மாலையிட்டு, குதிரையிலேற்றி அழைத்துச் சென்று, வரவேற்பளித்தார்கள். அங்கு கொத்தலாவல உரையாற்றிய போது-

"தமிழுக்கும், சிங்களத்துக்கும் சம உரிமை வழங்குவேன்" என உறுதியளித்தார். அவர் தலைநகர் திரும்பியதும், அவரது உறுதியுரை காற்றில் பறந்தது.

தென்னிலங்கையில் பண்டாரநாயக்க "மகாஜன எக்சத் பெரமுன" என்ற (M.E.P.) கூட்டுக் கட்சியை உருவாக்கினார். அந்தக் கட்சியில் இலங்கரத்தின பிலிப்குணவர்த்தனா, சி.பி.டி. சில்வா, கே.எம்.பி. ராஜரட்ன இவர்கள் போலவுள்ள இனத்துவேஷிகள் இன்னும் பலர் அங்கம் வகித்தனர்.

பண்டாரநாயக்கவின் "சிங்களம் மட்டும்" சட்ட அமுலாக்கல் பற்றிய பிரசாரம் காரணத்தால் கண்டியில் ஐ.தே.க, மாநாட்டைக்கூட்டித் தனது கட்சியும் 'சிங்களம் மட்டும்' சட்ட மசோதாவை நாடாளுமன்றில் நிறைவேற்றும் என்றும், தனது கட்சிக்குப் பூரண ஆதரவு தரும்படியும் சிங்கள மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

1957 ஆம் ஆண்டு கலைக்கப்பட வேண்டிய நாடாளுமன்றம் - 1956 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டும், பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. பண்டாரநாயக்கவினதும், அவரது கட்சிச் சகபாடிகளினதும், இனத்துவேஷப் பிரசாரங்களில் மயங்கிய மக்கள் - தமிழின விரோத உணர்வு கொண்ட பண்டாரநாயக்கவை ஆட்சி பீடம் ஏற்றினர்.

இவருடைய எம்.இ.பி.கட்சி ஆட்சி பீடம் ஏறியதும், இவரால் நியமிக்கப்பட்ட முக்கிய அமைச்சர்கள் தமிழ் மக்களை மிகக் கெடூரமான வார்த்தைப் பிரயோகங்களால் மேடைகளில் இழிவுபடுத்திப் பேசினார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் தகநாயக்க, கே.எம்.பி.இராசரத்தினா ஆகியோர் ஆவர்.

"தமிழர்களின் தோலில் செருப்புத் தைத்துப் போடுவேன்" என இராசரத்தினா கூறினார்.

பண்டாரநாயக்க ஆட்சிக் காலம் ஆக மூன்று வருடகாலமே. இந்த மூன்றாண்டு கால ஆட்சியிலும் உலகளாவிய ரீதியில் அவரால் பிரகாசிக்க முடியவில்லை. இதற்கு என்ன காரணம்?

பண்டாரநாயக்க ஒரு பௌத்த பிக்குவால் சுடப்பட்டு, மரணித்த போது, அவரது மனைவி சிறிமாவோ அம்மையாரும், அவருடைய பிள்ளைகளும் கூக்குரலிட்டுக்கதறி அழுததை அன்று வானொலியில் செவிமடுத்த போது, நாமும் எமது நெஞ்சம் நெகிழ்ந்து கவலைப்படத் தான் செய்தோம்.

ஆனால், அவருடைய கணவனும், தந்தையுமாகிய பண்டாரநாயக்க விதைத்ததை அறுவடை செய்தபோது, யாரால் அவரைக் காப்பாற்ற முடியும்.

பண்டாரநாயக்கவின் எழுச்சியும், வீழ்ச்சியும் விட்டுச் சென்ற, கற்றுத் தந்த ஒரு வரலாற்றுக்கான பாடத்தின் மூலம் பண்டாரநாயக்கவின் குடும்பம், திருந்த முடியாமற் போனமை துர்லபம் தான்.

1969 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற மீள் தேர்தலில் சிறிமாவோ அம்மையார் ஆட்சியமைப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்தவர் தந்தை செல்வா. தமிழர் பிரதி நிதிகளே டட்லியின் கட்சியை வீழ்த்திக் கொடுத்தனர். அந்தக் கைங்கரியத்துக்குக் கைமாறாகக் கிடைத்தவை அடியுதைகளும், படுகொலைகளும்.

1977 ஆம் ஆண்டு ஜூலையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் யுகம் ஆரம்பமாகியது. ஓகஸ்டில் நாடு தழுவிய இனப்படுகொலைகள், அரசியல் யாப்பு மாற்றம். 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மாற்றம் இளைஞர்களின் கிளர்ச்சி - 1981 ஆம் ஆண்டில் பொது நூலகம், ஈழநாடு பதிப்பகம் எரிப்பு, தமிழ் இளைஞர்கள் வீடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டுச் சுடப்பட்டு நாய்களைப் போல் வீதிகளிலும், பல இடங் களிலும் வீசப்பட்டனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன சர்வாதிகாரிகளான முசோலினி, ஹிட்லர் ஆகியோரைப் போன்று 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்னும் திமிர்நிறைந்த அறைகூவலுடன் அளவுக் கதிகமான இராணுவ நடவடிக்கைகளையும் குடாநாட்டில் கட்டவிழ்த்து விட்டதால் தமிழ் இளைஞர்களின் அளவு கடந்த சீற்றத்துக்குள்ளானார்.


இதன் விளைவாக 1985 ஜூலை 23 இல் திருநெல்வேலியில் தேசியத் தலைவரின் நெறிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து மீண்டும் இனக்கலவரம் தலைவிரித் தாடியது. தொடர்ந்து ஆயுதப் போராட்டம் முழு வீச்சுடன் முன்னெடுக்கப்பட்டது.

1987 ஏப்பிரலில் வல்வெட்டித்துறைப் படுகொலை, ஜூலையில் நெல்லியடி முகாம் கப்டன் மில்லரின் கரும்புலித் தாக்குதல், 1987 ஜூலை 29 இல் ராஜீவ், ஜே. ஆர்.ஒப்பந்தம், இந்திய ஆக்கிரமிப்புப் படையின் வருகையும் அக்கிரமங்களும், விடுதலைப் புலிகளின் ஆக்ரோசமான எதிர் தாக்குதல்களால் முறியடிக்க, 1990 மார்ச் 24 இல் இந்தியப் படையின் வெளியேற்றம் நிகழ்ந்தது.

1989 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தை 1990 ஆம் ஆண்டில் முறிவடையவே, ஜூன் 10இல் இரண்டாவது ஈழப்போர் முன்னெடுப்பு, 1993 மே ஒன்றில் பிரேமதாசா கொல்லப் பட்டார். அந்தவேளை பிரதமராக விருந்த விஜேதுங்கா ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

1994 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா அம்மையார் சமாதானத்துக்கான யுத்தத்தை 11 வருடகாலமாக முன்னெடுத்துத் தமிழினத்தையே துவம்சம் செய்தார். தற்போது அவருடைய அதிகார ஆட்சியின் அந்திமகாலம் அண்மித்துள்ள வேளையில் - சுடலை ஞானம் பெற்று, சமாதானம் பற்றியும், சமஷ்டி ஆட்சி பற்றியும் உரக்கக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.






சமீபத்தில் சந்திரிகாவின் சகோதரரும், வெளிநாட்டமைச்சருமான அனுராபண்டாரநாயக்க தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தமைக்கு ஐ.தே.க.தலைவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவே காரணமென்றும், தங்களுக்கு அதில் எத்தகைய பங்கும் இல்லையென்றாற் போல் கருத்துக்களை உதிர்த்திருந்தார். பாவம் அவர். அவரது தந்தையார் தமிழ் மீது இனத்துவேஷ நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது, அவர் சிறுபிள்ளையாக இருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியும், மாறிமாறி ஆட்சி அமைத்தபோதெல்லாம் இனவாத விருட்சத்தை நெய்யூற்றி வளர்த்து, இன அழிப்பு நடவடிக்கைகளை , நான் முந்தி, நீ முந்தி எனப் போட்டி போட்டுக் கொண்டு மிகவும் மூர்க்கத்தனமாக முன்னெடுத்துத் தமிழ் மக்களைக் கொன்று குவித்து, அவர்களின் அளப்பரிய சொத்துகளை அழித்தமை வரலாறு கற்றுத்தரும் உண்மைகள்.

இவைகள் ஒரு புறமிருக்க - அனுராவின் சகோதரியும், சிறிலங்காவின் ஜனாதிபதியுமான சந்திரிகா அம்மையார் 11 வருடகாலமாக மனிதாபிமானத்தை அறவே ஒழித்து நடத்திய கொடூரமான யுத்தத்தால், வயது வேறுபாடின்றி கொல்லப்பட்டவர்கள், உடல் சிதறிப் பலியானவர்கள், குழந்தைகள், பாலியல் வல்லுறவுக்குள்ளாகிக் கற்பைப் பறிகொடுத்தவர்கள் ஆயிரமாயிரம்.

1956 இல் பண்டாரநாயக்கவின் கொலைக் கலாசாரத்தை மீண்டும் ஒற்றையாட்சித் திட்டத்தின் பேரினவாதச் சக்திகளான ஜே.வி.பி, ஹெலஉறுமயக் கட்சிக் காரருடன் இணைந்து ஒற்றையாட்சித் திட்டத்தில் செயற்படுத்துவதற்கு ஐ.ம.சு முன்னணி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தற்பொழுது முயன்று கொண்டிருப்பது அவரது சிந்தனையிலிருந்து தெளிவாகிறது.

பிரதமர் மேடைகளில் மேற்கொள்ளும் பரப்புரைகளைச் சிந்தித்துத் தான் பேசுகின்றாரா? அல்லது ஜே.வி.பியினரின் சிந்தனையால் ஈர்க்கப்பட்டுத்தான் பேசுகின்றாரா? என்பது தான் புரியவில்லை. இந்த ஒற்றையாட் சித்திட்டத்துக்குப் பின்னணி வேறு புறசக்திகளாகவும் இருக்கலாம்.

பிரதமர் தேர்தலில் வென்று, ஒற்றையாட்சி முறைமை அமுலாக்குவதாயின், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் நிர்வாகம் தடுத்து நிறுத்தப்படும் என்பதே பொருள். தமிழருக்குத் தாயகம் என்று ஒன்றில்லை, தாயகக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று ஜே.வி.பியின் குரலில் கூறிவிட்டால், தமிழரின் தாயகமண் அழிந்து போய்விடுமா?

ஜே.வி.பியுடனிணைந்து படைகளைக் குவித்துக் கொண்டு, தமிழரின் தாயக மண்ணில் நினைத்தவிடமெல்லாம் புத்தரின் சிலைகளை நிறுவி, அரச மரத்தையும் நட்டுவிட்டால் தமிழரின் தாயகம் சிங்கள ஆட்சியாளரின்கைக்கு மாறிவிடுமா?

27 வருடங்களாக தமிழர் தலைவர்கள் உரிமைக்குக் குரல் கொடுத்த போதெல்லாம் அடி, உதை, அழிப்பு, கொள்ளையடிப்பு இவைகளே பல னாகக் கிடைத்தன. இப்படிப்பட்ட கொடுமைகள், அட்டூழியங்களெல்லாம் நடை பெற்றவேளை, பிராந்திய வல்லரசு, சர்வதேச வல்லரசுநாடுகள், ஐரோப்பிய யூனியன் முதலிய நாடுகளின் தலைவர்கள் எல்லாம் நன்றாகத் துயின்று கொண்டிருந்தனர் போலும். இவைகள் யாவும் பயங்கரவாதச் செயல்களாக அவர்களுக்குத் தென்படவில்லை.

இந்தக் கொடுமைகளிலிருந்தும், இன அழிவிலிருந்தும் தமிழ் மக்களைக் காப்பாற்ற ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் தான் விடுதலைப் புலிகள். இவர்களைப் போன்று அன்று அரசை எதிர்த்துப் போராடித் தமிழீழம் அமைக்கப் புறப்பட்ட ஏனைய இயக்கங்கள் அரசுடன் இணைந்து பதவிப் பதர்களாகி, கருங்காலிகளாக இயங்கி வருவதும் தெரிந்ததே!

1983ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் நாள் வரை ஆயுதப் போராட்டங்களுக்கு முகங்கொடுத்தவர்கள் புலிகளும், தமிழ் மக்களும் மட்டுமே. யுத்தம் புரிந்தவர்கள் அரசும் புலிகளுமே. இருதரப்பினரும் யுத்தத்தில் ஈடுபட்ட காரணத்தால், யுத்த நிறுத்தத்திலீடுபட்டு, அமைதிச் சூழ்நிலையை உருவாக்கியவர்கள் இந்த இருதரப்பினரும் என்பதைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதற்கமையவே நோர்வே அனுசரணையாளர்களின் அனுசரணையுடன் "புரிந்துணர்வு ஒப்பந்தம்" கைச்சாத்தாகியது. நாட்டில் தென்பகுதியில் அமைதி உருவாகியது. ஆனால், தமிழர் தாயகத்தில் அது முயற்கொம்பாகி விட்டது.

யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் இருதரப்பினர் மட்டுமே. இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு, அதன் மூலம் நாட்டில் ஓர் அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டதென்றால் அவற்றின் கதாநாயகர்கள் புலிகள் என்பதை உலகமே ஒப்புக்கொள்ளும்.

உலகளாவிய ரீதியில் சுதந்திரப் போராட்டங்கள் இடம் பெறும் நாடுகளில் சமாதானப் பேச்சுவார்த்தை என்பது ஆட்சியாளருக்கும், போராடும் குழுவுக்குமிடையில் வெளிநாட்டு மத்தியஸ்தரின் கண்காணிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே.

இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் சமாதானப் பேச்சுவார்த்தையை முத்தரப்பு பேச்சுவார்த்தையாக்க முனைவது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது, யதார்த்தத்துக்குப் புறம்பானது,

எமது 20 வருட ஆயுதப் போராட்டத்தில் முஸ்லிம் மக்களது தலைவர்கள் வகித்த பங்கென்ன? ஐ.தே.க அரசும், பொ.ஐ.மு அரசும் ஆட்சி அமைத்த வேளைகளில், மாறிமாறிப் பறந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்ட தென் பகுதி முஸ்லிம் தலைவர்கள், தாம் சார்ந்த அரசுகளின் ஆட்டங்களுக்கெல்லாம் தாளம் போட்டனர்.

தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் மிகவும் சூடுபிடித்துள்ள நிலையில் ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வார்த்தைப் பிரயோகங்களும், கருத்துகளும் முன்னைய கருத்துகளின்றும் பூரணமாக மாறுபட்டன வாகக் காட்சியளிக்கின்றன.

ஹக்கீமின் முத்தரப்புப் பேச்சு வார்த்தைக்கு - ரணில் சம்மதித்துள்ள படியாலும், முஸ்லிம் மக்களுக்கென மாகாண சுயாட்சி வழங்க உறுதியளித்துள்ள படியாலும், தமது கட்சியின் ஆதரவை ரணிலுக்கு அளிக்கவுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களினதும், எண்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களினதும் குருதியில் காய்நகர்த்தித் தமது காரியத்தைச் சாதிக்கும் ஹக்கீமின் மதியூகமும், செயற்றிறனும் போற்றப்பட வேண்டியதே.

அதே சமயம் தமிழர் தாயக மண்ணில் நடைபெற்று முடிந்த தமிழர் எழுச்சி மாநாடுகளிலும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்விலும் உரையாற்றிய முஸ்லிம் தலைவர்கள் அனைவரும், தமிழர் தாயகத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் அனைவரும், புலிகளுடன் இணைந்து போராடுவதன் மூலமே முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென விவேகமுடன் உரை நிகழ்த்தியுள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கது.

இனி வேட்பாளர்கள் பற்றி எமது முடிவென்ன? இதுவே எம் முன்னுள்ள கேள்வி.

ஜனாதிபதியின் தலை மையிலான சுதந்திரக் கட்சி வேட்பாளரான பிரதமர், தான் ஜனாதிபதியானால் 'தாயகக் கோட்பாட்டைக் கைவிடும்படி புலிகளிடம் கேட்கப்படும்" எனக் கூறி இருக்கிறார். இதன் பொருள் என்ன?

இரு தசாப்த காலமாகப் புலிகளும், தமிழ் மக்களும் குருதி சிந்திப் போராடி வென்றெடுத்து, ஆட்சி செய்யும் பகுதிகளை மஹிந்த ஐயாவின் பாதங்களில் ஒப்படைக்க வேண்டும் என்பது தானே அவர் இடும் சட்டம். இது ஒன்றே அவருடைய பெயரைத் தூரவிலக்கி வைக்கப் போதுமானது.

அடுத்து எல்லாக் கட்சிகளுடனும், தரப்பினருடனும் இணைந்து சமாதானத் தீர்வு முன்னெடுக்கப்படும் என்பது. இது நடைமுறைக்குச் சாத்தியமா? எமது தேசியத் தலைவரையும், புலிகள் இயக்கத் தையும் எவ்வளவு கீழ்த்தரமான நிலையில் வைத்து மதிப்பீடு செய்கிறார் என்பது புலனாகிறது.

எமது தமிழ் மக்களில் பலர் ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பம்மாத்துக்கள் பற்றி தெளிவு பெறாதநிலையில் உள்ளனர்.

மஹிந்த எதையும் வெளிப்படையாகக் கூறுவார். ஆனால் ரணில் ஒரு சிரிப்புடன் அப்பாவி மக்களை மடக்கும் சாதுர்யம் படைத்தவர். ஜே.ஆர்.ஆல் அரசியலுக்கு வாரிசாகத் தயாரிக்கப்பட்டவர். கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைச் சிங்கள மக்களுக்கு அளித்துள்ள போதிலும், தமிழ் மக்களுக்கு அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் பழைய கஞ்சிதான்.

விசேடமாகத் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தக் கூடியவகையிலும், வடக்கு-கிழக்கு மாகாணங்களை வேறுபடுத்தும் நோக்குடனும் பாதுகாப்புப் படையை உருவாக்கும் வகையிலும் அவரின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது.

ரணிலும், சந்திரிகா அம்மையாரும் தேர்தலுக்கு முன்பே இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை, தமிழ் மக்களுக்கு ஒரு முன் எச்சரிக்கை என்றே எடுக்க வேண்டும். பயங்கர வாதத்துக்கு எதிரான ஒப்பந்தம் என்ற பெயரில் ஒன்று அமெரிக்காவுக்கும், சிறிலங்காவுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டிருப்பது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு ஒரு நல்ல அறிகுறியல்ல.

சமஷ்டி என்ற வார்த்தைப் பிரயோகத்துடன் மாநில ஆட்சிக்கும் குறைவான அதிகாரங்களையுடைய பிரதேச அமைப்பிலான ஒரு தீர்வையே பிராந்திய சபை என்ற பெயருடன் முன்வைக்க அவர்கள் முனைகின்றனர்.

ஏற்க மறுப்பின் புலிகளை அடக்கி அழிப்பதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் உதவ தயார் நிலையில் உள்ளதாகவும் பேரினவாத ஊடகங்கள் எழுதி வருகின்றன. இந்த நிலையில் தமிழ் மக்கள் அனைவரும் தேர்தலைப் புறக்கணிப்பதை விடவும், வேறு தேர்வு இல்லை என்றே கூறவேண்டும். ✪

**மாரீசன்**

ஈராக்கிடம் எண்ணெய் வாங்கியதில் ஊழல்

# இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் பதவிவிலக வேண்டிய நெருக்கடி நிலையில்!



நட்வர்சிங்

புதுடெல்கி —

1991 ஆம் ஆண்டு குவைத்மீது படையெடுத்ததால் ஈராக் மீது ஐ.நா சபை பொருளாதார தடைவிதித்தது. இதனால் ஈராக் மக்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்களும், மருந்துகளும் கிடைக்காமல் அவதிப்பட்டனர். இதைத் தொடர்ந்து உணவுக்கு எண்ணெய் என்ற திட்டத்தை ஐ.நா.சபை அமுல்படுத்தியது.

அந்தத் திட்டத்தின்படி ஈராக் தனியாருக்கு கச்சா எண்ணெய் விற்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் எண்ணெய்க்கான விலையை ஐ.நா சபை நிர்ணயம் செய்தது. ஆனால் பணத்துக்கு ஆசைப்பட்ட சதாம் இதில் பல கோடி ஊழல் செய்தார்.

ஐ.நா.சபை நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலைக்கு கச்சா எண்ணெயை சதாம் விற்றார். இதற்காக இடைத்தரகர்களுக்கு லட்சக் கணக்கில் தரகுப்பணம் கொடுத்தார். இந்த முறைகேடுகள் பற்றி அறிந்ததும் அது பற்றி விசாரிக்க பால்வோல்கர் தலைமையில் ஒரு குழுவை ஐ.நா.சபை நியமித்தது.

அண்மையில் வோல்கர் குழு தன் அறிக்கையை வெளியிட்டது. அதில் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங், அவரது மகன் ஜனத் சிங் இருவருக்கும் உணவுக்கு எண்ணெய் திட்ட ஊழலில் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊழல் மூலம் காங்கிரஸ் கட்சி ஆதாயம் அடைந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு டெல்கி அரசியலில் பெரும் புயலை ஏற்படுத்தியுள்ளது. நட்வர்சிங் பதவி விலகவேண்டும் என்று பாரதீய ஜனதா போர்க் கொடி உயர்த்தியுள்ளது. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் இந்தச் சம்பவம் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

வோல்கர் விசாரணைக் குழுவெளியிட்ட குற்றச்சாட்டு ஆதாரம் அற்றது. எனவே, வோல்கர் அறிக்கையை முழுமையாக வெளியிட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி ஐ.நா.சபைக்கு அறிவித்துள்ளது. ஆதாரத்தை வெளியிட இயலாவிட்டால் வோல்கர் குழு நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இந்த விவகாரத்தில் ஒரு முழுமையான விசாரணை நடத்தி உண்மைகளை வெளியில் கொண்டு வந்து எதிர்க்கட்சிகள் வாயை அடைக்க காங்கிரஸ் தீவிரமாகியுள்ளது. இதற்காக விசாரணை குழு அமைக்க பிரதமர் மன்மோகன்சிங் ஆலோசனை நடத்திவருகிறார். அடுத்த வாரத்தொடக்கத்தில் விசரணைக் குழு அமைக்கப்படும் என்று தெரிகிறது.

விசாரணைக் குழுவில் இந்திய மத்திய அமைச்சர்களான பிரணாப் முகர்ஜி, சிவராஜ் பட்டேல், ப.சிதம்பரம் ஆகிய மூவரும் இடம்பெறக் கூடும், இவர்கள் நட்வர்சிங் மற்றும் அவர் மகனிடம் விசாரித்து அறிக்கையை சமர்ப்பிப்பார்கள்.

உணவுக்கு எண்ணெய் திட்டத்தில் நடந்துள்ள ஊழல் காங்கிரஸ் கட்சியின் மதிப்பை கெடுத்துள்ளதால் பெரிய அளவில் பரிகாரம் தேட வேண்டிய நிர்ப்பந்தம் அந்தக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, நட்வர்சிங்கை மத்திய அமைச்சர் பதவியில் இருந்து விலக்க காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே குரல் எழுந்துள்ளது.

கூட்டணி கட்சித் தலைவர்கள் நட்வர்சிங்கை ராஜினாமா செய்யுமாறு வற்புறுத்துவதாக தெரிகிறது. இதனால் அமைச்சர் பதவியில் இருந்து விலக நட்வர்சிங் முடிவு செய்துள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு அவர் பதவியை ராஜினாமா செய்து கடிதம் கொடுத்ததாகவும், ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் அதனை ஏற்கவில்லை என்றும் உறுதி செய்யப்படாத ஒரு தகவல் வெளி யானது. தற்போது இந்த ஊழல் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளதால் நட்வர்சிங் எந்த நேரத்திலும் பதவியை ராஜினாமா செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பால்வோல்கர் தன்மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டை நட்வர்சிங் மறுத்துள்ளார். இது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும், இது குறித்து விளக்கம் அளிப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், நட்வர்சிங் கூறிய புகாரை பால் வோல்கர் மறுத்துள்ளார். இது தொடர்பாக நியூயோர்க்கில் வோல்கர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்பொழுது அவர் கூறியதாவது -

இந்த ஊழலில் தொடர்பு இருப்பதாக பட்டியல் இடப்பட்டுள்ள அனைவருக்கும் இதுபற்றி தகவல் அனுப்பினோம். இது தொடர்பாக விளக்கம் அளிக்கும் படி அனைவருக்கும் (நட்வர்சிங் உட்பட) வாய்ப்பு கொடுத்தோம்.

இந்த ஊழலில் சதாம் ஹுசேனிடம் மொத்தம் 270 கோடி டொலர் லஞ்சமாக கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் முன்கூட்டியே தகவல் கொடுத்து உங்கள் பெயரை சேர்க்கப்போகிறோம் - நீங்கள் அளிக்கும் விளக்கம் என்ன என்று கேட்டிருந்தோம். ஒருசிலர் விளக்கமளித்தனர். குற்றச்சாட்டுகளை அவர்கள் மறுத்தனர். அதையும் எங்கள் அறிக்கையில் சேர்த்தோம். ஆனால் சிலர் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இந்த ஊழல் விவகாரத்தில் 2500 நிறுவனங்கள் மற்றும் தனியார்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக பட்டியலிடப்பட்டுள்ளது.

ஈராக்கிலும் மற்றைய இடங்களிலும் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் இந்தத் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. இதில் யாரையும் பழி வாங்கும் எண்ணமோ அரசியல் உள்நோக்கமோ இல்லை.



வோல்கர்

பட்டியலில் இடம்பெற்ற நட்வர்சிங் அமைச்சர் என்பது எங்களுக்குத் தெரியாது. அவர் இந்தியமத்திய அமைச்சர் என்பது நேற்று முன்தினம்தான் எனக்குத் தெரியும்.

எங்களுக்கு காங்கிரஸ் கட்சி நோட்டீஸ் அனுப்புவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆவணங்கள் அடிப்படையில் கிடைத்த தகவல்களைத்தான் நாங்கள் தெரிவித்துள்ளோம். எது சரி எது தவறு என்று நாங்கள் கூறவில்லை என அவர் தெரிவித்தார்.

## மாரடைப்புக்கு புதிய மருந்து

லண்டன் —

மாரடைப்பு ஏற்பட்டு உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க ஒக்ஸ்போட் பல்கலைக்கழக டொக்டர்கள் புதிய மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.


ரத்தம் உறைவதைத் தடுக்கும் குளோபிடோகிரஸ் என்ற மருந்தையும் அஸ்பிரின் மருந்தையும் ஒன்றாகச் சேர்த்து இந்தப் புதிய மருந்தை அவர்கள் தயாரித்துள்ளனர்.

46 ஆயிரம் பேரிடம் இந்த மருந்தைக் கொடுத்துச் சோதனை நடத்தியிருக்கின்றனர். மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழக்கும் அபாயத்தை இது 7 சதவீதம் குறைத்துள்ளது. வருடந்தோறும் 1 கோடி பேருக்கு மாரடைப்பு ஏற்படுகிறது என மருத்துவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




## அமெரிக்காவிடமிருந்து எப் 16 விமானங்களை கொள்வனவு செய்யும் திட்டம் ஒத்திவைப்பு!

### பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு




இஸ்லாமாபாத் —

அமெரிக்காவிடமிருந்து எப்-16 போர் விமானங்களை கொள்வனவு செய்வதை ஒத்திவைக்கவுள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் நிர்வாகப் பகுதியான காஷ்மீரிலுள்ள அமெரிக்க இராணுவத்தின் நடமாடும் வைத்தியசாலைக்கு சென்ற பின்னரேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்யவிருந்த எப்-16 போர் விமானங்களை வாங்கும் திட்டத்தை ஒத்திவைக்கவுள்ளளேன். எமக்கு தற்போது தேவைப்படுவது கடந்தமாதம் எட்டம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளும் அழிக்கப்பட்டபிரதேசங்களுக்கான மீள் கட்டமைப்புக்கான உதவிகளுமாகும்.




பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் திட்டத்தில் மேற்கு நாடுகள் இரட்டை வேடம் பூண்டுள்ளன. இதுவரை அளிக்கப்பட்ட உதவித் தொகைகளில் குறிப்பிட்ட தொகையை கூட பெற்றுக்கொள்ள முடியவில்லை. சர்வதேச சமூகமும் முஸ்லிம் நாடுகள் மற்றும் பாகிஸ்தான் முஸ்லிம்கள் அனைவரும் தம்மாலான உதவிகளை வழங்கவேண்டும்.

மேற்கு நாடுகளின் உதவிகள் மிகவும் குறைந்ததாகவே கிடைத்துள்ளன. இதற்குக் காரணம் பூகம்பத்தால் மேற்கு நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் குறைந்ததளவானோரே பாதிக்கப்பட்டுள்ளனர். சுனாமி அழிவைவிட எமது நாட்டில் ஏற்பட்ட பூகம்ப அழிவு பலமடங்கு பெரியது. எனவே எமக்கு உதவிகளும் பாரியளவில் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.நாவின் மனிதாபிமான இணைப்பாளர் ஜோன் எக்லன்ட் தெரிவிக்கையில் - பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தேவைகள் தனித்துவமானவை. எனவே குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னர் அவர்களுக்கான உதவிகளை வழங்க வேண்டும்.

இதுவரை 130 மில்லியன் அமெரிக்க டொலரை ஐ.நா பெற்றுள்ளது. ஆனால் மேலும் இந்த உதவி தேவைப்படுகிறது. மக்கள் உயிரிழந்ததால் எந்தவித நிர்மாணப்பணிகளும் தேவையில்லை. இது போன்ற அழிவை நான் முன்னெப்போதும் காணவில்லை. 15,000 கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் படகு கவிழ்ந்து விபத்து; பெண்கள், சிறுவர்கள் உட்பட 60 பேர் பலி!



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் பயணிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்தவர்களில் குறைந்தது 60 பேர் உயிரிழந்துள்ளதாக பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கராச்சியிலிருந்து 180 கிலோ மீற்றர் தொலைவில் நடந்ததாகவும் உயிரிழந்தவர்களில் பெண்களும் சிறுவர்களும் அடங்குவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக சென்ற வேளையே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்திற்கான காரணம் எதுவும் தெரிய வரவில்லையெனவும், எனினும் படகில் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றியதே இந்த விபத்திற்கு காரணமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் படகில் சுமார் 80 வரையிலான மக்கள் ஏற்றப்பட்டிருந்ததாகவும் இவர்கள் அனைவரும் எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி பயணத்தை மேற்கொண்டதாகவும் மாகாண பேச்சாளர் சலாகுதீன் ஷைடர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் சடலங்களை கடற்படையினர் தேடி வருவதாக லெப். கொமாண்டர் அலி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நடத்தப்பட்டுவரும் படகுச் சேவை மிக மோசமான நிலையிலேயே உள்ளதாகவும் பயணத்தின்போது உயிர்காப்பு கவசங்கள் கொண்டு செல்லப்படுவது மிக அரிதெனவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*

# முத்தலிப், மீடின் கொலைகளுக்கு அவர்களே காரணமாக இருந்தனர்!

## குற்றம் சாட்டுகிறது இராணுவத் தரப்பு

இராணுவ புலனாய்வு அதிகாரிகளான லெப். கேணல் முத்தலிப், கேணல் ரிஸ்வி மீடின் ஆகி யோரின் படுகொலைகளுக்கு அவர்களே காரணமாக இருந்ததாக இராணுவத் தரப்பு குற்றம் சாட்டி யுள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரண இதுகுறித்து கூறியதாவது -

ரிஸ்வி மீடின், முத்தலிப் ஆகியோருக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், இருவரும் அதை மிக அரிதாகவே பயன்படுத்திக்கொண்டனர். இதுதான் அவர்களது படுகொலைகளுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்துவிட்டது என்றார்.

இதேவேளை - கேணல் ரிஸ்வி மீடின் படு கொலை தொடர்பாக சுமார் 20 பேரிடம் இதுவரை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 3 பேர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரிஸ்வி மீடின் கொலையாளி அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்காக விசேட குழுவொன்று திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டு மக்களுக்கு தேர்தலில் ஆர்வமில்லை!

## ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் பவ்ரல் தெரிவிப்பு

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமிழ் மக்களின் உரிமைகளைத் தொடர்ந்தும் புறக்கணித்து வருவதன் காரணமாக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் நிலைப்பாட்டில் யாழ்.மாவட்ட மக்கள் உள்ளதாக - பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள் யாழ்.மாவட்டத்திற்கு தேர்தலைக் கண்காணிக்க வருகை தந்த ஐரோப்பிய கண்காணிப்பாளர்களுக்குத் தெரிவித்தனர்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியைக் கண்காணிப்பதற்கு இரண்டு ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள் வருகைதந்துள்ளனர். இவர்களைப் பவ்ரல் அமைப்பு பிரதிநிதிகள் நேற்று சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இதேவேளை, பவ்ரல் அமைப்பின் 1036 கண்காணிப்பாளர்கள் யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளதுடன், 50 சர்வதேச கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் கடற்பகுதியில் படகுத்தொடரணி பிடிபட்டது!

கொழும்பு —

பொத்துவில் கடல் பிராந்தியத்தில் 5 சிறிய படகுகளை இழுத்து வந்த பெரிய இழுவைப்படகொன்றை திருகோணமலை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

படகுத் தொடரணி ஒன்று செல்வதைத் தூரத்திலிருந்து அவதானித்த கடற்படையினர், அந்தப்படகுத் தொடரணியை முற்றுகையிட்டு சோதனையிட்டபோது அந்த 5 சிறிய படகுகளில் ஆட்களோ எவ்வித பொருட்களோ இருக்கவில்லை.

சிறியபடகுகளை இழுத்து வந்த பெரிய இழுவைப்படகில் ஒருவர் மாத்திரம் இருக்கக் காணப்பட்டதாகவும் -

இந்தப் படகுத் தொகுதியைக் கைப்பற்றிய கடற்படையினர் திருமலைத் துறைமுகத்திற்கு இழுத்துவந்து துறைமுக காவல்துறையினரிடம் நேற்று மாலை ஒப்படைத்தனர்.

# அரசியல் கட்சித் தலைவரை கொல்வதற்கு முயற்சியாம்!

அரசியல் தலைவர் ஒருவரை படுகொலைசெய்ய திட்டமிட்டுள்ள பாதாள உலகக் குழுவை கைது செய்ய தென்பகுதிக்கு பொலிஸ் சிறப்புக்குழு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது-

அரசியல் கட்சித் தலைவர் ஒருவரை தெற்குப் பிரதேசத்தில் படுகொலைசெய்ய திட்டமிட்டுள்ளதாக அக்கட்சியின் கொழும்பு அலுவலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து இந்த சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பாதாள உலகக் குழுத் தலைவரைக் கைதுசெய்ய பொலிஸ் அதிகாரி டி.ஈ. வெதசிங்க தலைமையிலான விசேட குழு அந்தப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒரு வாரத்துக்குள் அந்தக் குழுவினரை பொலிஸ் சுற்றிவளைத்து விடுவார்கள் என எதிர்பார்க்கிறோம் என சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

### கண்காணிப்புக்...

பொறுப்பிலிருந்து நோர்வே விலகிக்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் இப்படியான எந்தவொரு முடிவும் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய இருதரப் பினரது ஆலோசனைக்குப் பின்னரே மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### புலனாய்வு...

தொடர்புபட்டவர்கள் குறித்த போதுமான விசாரணை விபரங்களை இலங்கை அரசு மற்றும் பொலிஸார் எமக்கு வழங்கவில்லை.

இந்த இரண்டு கொலைகள் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கம் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளது. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்யவேண்டுமெனில் அதனுடன் கூடிய விசாரணைக்குரிய தகவல்களை வழங்கவேண்டும். விசாரணைக்காக உதவிகளை வழங்குவது முறைப்பாட்டாளர்களின் பொறுப்பாகும்.

ஆனால், இலங்கை அரசு கேணல் மீடின் மற்றும் லெப்.கேணல் முத்தலிப்கொலை தொடர்பான விசாரணையின் முன்னேற்றம் குறித்த விபரங்களை எமக்கு வழங்கவில்லை. எனவே இந்தக்கொலைகள் தொடர்பாக எம்மால் அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார். (தே)

# ஜே.வி.பியினர் கொலைகாரர்கள் என்பதை ஆணைக்குழுக்கள் மூலம் கண்டுபிடித்தேன்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு —

அரசியல் வன்முறைகளை மேற்கொண்ட குழுக்களை - நான்கு ஆணைக்குழுக்களை நியமித்ததன் மூலம் கண்டுபிடிக்கமுடிந்ததாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அரச வன்முறைகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் வன்முறையாலேயே நான் எனது கணவரை இழந்தேன். முன்பு ஒருவரின் காலத்தில் அரசாங்கமும் ஜே.வி.பியும் கொலைகளில் ஈடுபட்டன. எமது மக்களை ஜே.வி.பி. கொன்றது. ஜே.வி.பியை அரசாங்கம் கொன்றது. ஜே.வி.பி.யினர் எம் மவர்களையும் ஐ.தே.கட்சியினரையும் கொன்றனர். இவற்றை நான்கு ஆணைக் குழுக்களை அமைத்து கண்டுபிடித்தேன்.

33 ஆயிரம் பேர் தெற்கில் கொல்லப்பட்டனர். எம்மைக் கொன்ற ஜே.வி.பிக்கு மீண்டும் முக்கியத்துவம் அளித்து அரசியல் புரியும் உரிமையையும் நாமே வழங்கினோம்.

நாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்க விருந்த பல சிரேஷ்ட தலைவர்கள் அரசியல் வன்முறைகளில் கொல்லப்பட்டனர். இது நாட்டிற்கு பாரிய அச்சுறுத்தலாகும் எனத் தெரிவித்தார்.

### போர்நிறுத்த...

மீளாய்வு செய்யவேண்டிய தேவை இருக்கிறது. நாம் யுத்தத்திற்கு எதிரானவர்கள் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

இவருடன் ஈ.பி.டி.பி பொதுச்செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும், பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சியும் வந்திருந்தனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பலாலியில் படையினர் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர்...

வேலை வாய்ப்புத் தொடர்பாக பேசவருமாறு அழைப்பு விடுத்து வருவதாகவும் பலரும் விசனம் தெரிவித்தனர்.

### முகமாலை...

குண்டொன்று இருப்பதை அவதானித்த புலிகள் - இதுகுறித்து விசாரணை நடத்த முயன்றபோது - இளைஞர்கள் இருவர் வாகனத்திலிருந்து இறங்கி ஓட முற்பட்டனர்.

இவர்களில் ஒருவர் பிடிபடவே, மற்றவர் இராணுவ சோதனைச் சாவடியை நோக்கி ஓடினார். நிற்குமாறு கோரியும் அவர் நிற்காமல் ஓடியதை அடுத்து - விடுதலைப் புலிகள் பாதுகாப்புக் கருதி எச்சரிக்கை வேட்டுத் தீர்த்தனர்.

எனினும் இந்த எச்சரிக்கையையும் மீறிச் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டத்தில் அவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிவதற்கு விடுதலைப் புலிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இந்தச் சம்பவத்தில் மதிமுகராஜா விஜயவர்மன் (வயது 25) என்ற தாவடி வடக்கைச் சேர்ந்த இளைஞரே காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

இவரை உடனடியாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிசிக்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### வின்சர்...

இடத்தில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நேற்றுப்பிற்பகல் யாழ்.வின்சர் தியேட்டர் சந்திப்பகுதியில் பதற்றநிலை நிலவியது.

### கழுத்து...

கால்கள் கட்டப்பட்ட நிலையில் கழுத்தில் பாரிய வெட்டுக் காயத்துடன் போடப்பட்டிருந்த மேற்படி சடலத்தைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டார்.

இதனையடுத்து நீதிவானின் உத்தரவுக்கு அமைய யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. மாலை வரை மேற்படி நபரின் உறவினர்கள் எவரும் சடலத்துக்கு உரிமை கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (72)

# ஓட்டோச் சாரதி மீது திருமலையில் சூடு!

திருகோணமலை மாவட்டத்தில் செல்வவிநாயகபுரம் வீதியில் அமைந்துள்ள வட கிழக்கு மாகாண தொழில் பயிற்சி நிலையம் முன்பாக நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் ஓட்டோ சாரதி ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

அபயபுர பகுதியைச் சேர்ந்த நளீன் பிரசன்ன என்ற இளைஞரே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளதாகவும், மோட்டார்சைக்கிளில் வந்தவர்கள் தன் மீது சரமாரியாகச் சுட்டதாகவும் இதிலிருந்து தப்பி தான் பாய்ந்து ஓடும் போது தனது காலில் துப்பாக்கிச் சூடு பட்டதாகவும் அவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

இந்த இளைஞர் தற்போது திருமலை அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து உப்புவெளி பொலிஸாரால் வீதிச் சோதனைகள் தீவிரமாக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (04)

### அடுத்த சமாதான...

சுனாமி தாக்குதல் நடந்த இந்தோனேஷியாவில் ஆசே இனப்பிரச்சினைக்கு பின்னர் உலகின் அடுத்த சமாதான உடன்படிக்கை இலங்கையிலேயே ஏற்படவேண்டும். இலங்கையில் புதிய அரசாங்கம் அடுத்து வரும் மாதங்களில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்தி, உண்மையான அபிவிருத்தியை நோக்கிச் செல்லுமென எதிர்பார்க்கிறோம்.

தங்கள் நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்கள் பற்றிய பிரதான பொறுப்பு தங்களுக்கு இருப்பதை நாட்டின் நிர்வாகிகள் மறப்பது அடிக்கடி நிகழ்கிறது. அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு சர்வதேச ரீதியாக ஆற்ற வேண்டிய பணிகள் இருந்தாலும் அது போதுமானதல்ல. பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டுமாயின் அந்தந்த அரசாங்கங்கள் தங்களுக்கான கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

ஆசியாவில் பெரும் அழிவுகளுக்கு முகம் கொடுத்த ஒரு நாடாக இலங்கை உள்ளது. யுத்தத்தால் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சுனாமி அனர்த்தத்தால் அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் சிலரை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பக்கூடிய நிலை உள்ளது.

அவர்களின் இடங்களுக்கு திருப்பி அனுப்ப முடியுமாயின் அது ஏனையவர்களுக்கும் தமது இடங்களுக்குச் செல்வதற்கு தைரியமூட்டுவதாக அமையும்.

ஆனால், இடம் பெயர்ந்தவர்களுக்கு மீண்டும் தங்களது இடங்களுக்கு செல்லமுடியாதுவிடின், அங்கு செல்ல அவர்கள் விரும்பாவிடின், அவர்கள் தற்போது இருக்கும் இடங்களில் தேவையான பாதுகாப்பையும் அவர்களுக்கு காணி வசதிகளையும் வழங்கவேண்டும்.

இன்று உலகம் முழுவதும் வன்முறைகள்,மோதல்களால் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 25 மில்லியன் ஆகும். எனினும், உள்ளக இடப்பெயர்வுகள் குறித்து போதியளவு கவனம் செலுத்தப்படுவதில்லை. இடம்பெயர்ந்தவர்களுக்காக மட்டும் செயற்படும் ஐக்கிய நாடுகள் அமைப்பொன்று இல்லாமை இதில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

### கட்டட வடிவமைப்பு...

முன்னெடுக்கமுடியாத சூழல் எமது பிரதேசத்தில் உள்ள போதும் - வேறு உதவிகள் மூலம் நடைமுறைப்படுத்துகின்ற சிறிய சிறிய திட்டங்களைக்கூட சிறப்பான முறையில் திட்டமிட்டு தரமானதாக செயற்படுத்தவேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் உண்டு.

போர் இடம்பெற்ற காலங்களில் எமது மண்ணில் நடைமுறையரசு சிறப்பாக செயலாற்றிவந்தாலும், திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான முக்கியத்துவம் கூடுதலாகக் கொடுக்க முடியவில்லை.

தற்போதுள்ள சூழலில் கடந்த காலப் போர்ச் சூழலைக் காரணமாகக் கூறிக்கொண்டு திட்டமிடலிலும் அபிவிருத்தியிலும் பின்தங்கிவிடமுடியாது. இவற்றில் நாம் கூடுதல் கவனம் செலுத்தல்வேண்டும்.

தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் எதிர்காலத்தில் பல நன்மைகளைத் தரக்கூடிய விதத்தில் திட்டமிட்டமுறையில் அமைக்கப்படவேண்டும்.

எமது தேசத்தை வளமான தேசமாகக் கட்டியெழுப்புவதில் பொறியியலாளர்களின் பங்கு முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தால் விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ள கட்டட வடிவமைப்பு மற்றும் கட்டுமானங்கள் தொடர்பான வழிகாட்டும் நெறிகள் பற்றி வடக்கு - கிழக்கில் பல்வேறு திணைக்களங்களிலும் பணியாற்றும் பொறியியலாளர்களுடன் கலந்துரையாடும் சந்திப்பாக இது அமைந்துள்ளது.

மேற்படி வழிகாட்டும் நெறிகளை அடிப்படையாகக்கொண்டே எதிர்காலத்தில் கட்டுமானப் பணிகளும், அவற்றுக்கான அனுமதி மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் ஸ்கந்தகுமார்
### (கந்தா மாஸ்ரர்)

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஸ்கந்தகுமார் (கந்தா மாஸ்ரர்) காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கணித அறிவு வளர்சோலை.**
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# எமது ஒட்டுமொத்த பலத்தையும் திரட்டி ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்போம்

## ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

ஊர்காவற்துறை

எமது நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கும், மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கும், சர்வதேசத்தின் ஆதரவைத் தமிழீழ மக்கள் பெறுவதற்கும் எமது ஒட்டுமொத்த அரசியல் பலத்தை திரட்டி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை பகிஷ்கரிக்குமாறு - தீவக வடக்கு ஊர்காவற்துறை பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் - 2005 நவம்பர் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களாகிய நாம் பகிஷ்கரிப்பது மிக முக்கியம். ஏனெனில், தற்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் மிக முக்கியமான இரண்டு பிரதான கட்சிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுமாகும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள வெறிகொண்ட பேரினவாதிகளுடன் சேர்ந்து, தமது கோர இனவெறியை வெளிப்படுத்தி தான் ஒரு சிறந்த சிங்கள பௌத்தன் என வெளிக் காட்டி உள்ளார். அத்துடன், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை, சுதந்திர வேட்கையை இல்லாது செய்வதற்காக ஒற்றையாட்சி அமைப்பு முறையை ஏற்படுத்தப்போவதாகவும், சுனாமிப் பேரழிவால் அழிந்தவடக்கு-கிழக்கு பகுதிகளுக்கான நிவாரணப் பணிக்கு அமைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பையும் இல்லாது செய்வதற்கு மஹிந்தவின் சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் தமிழ் மக்களின்மனிதாபிமான பணிகளுக்கு சாவுமணி அடிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எப்படி தமிழ் மக்களாகிய நாம் வாக்களிக்க முடியும்?

தான் ஒரு சமாதானத் தூதுவன் என வெளிக்காட்டி, சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுவதை சமாதான ஒப்பந்தத்தின் மூலம் நிறுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்திருப்பதாக சிங்கள மக்களுக்குக் கூறி - அமெரிக்கா, இந்தியா போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், சர்வதேச வலையமைப்புக்குள் வைத்து பலவீனப்படுத்தியதாக இறுமாப்பு பேசிவருபவர் ரணில் விக்கிரமசிங்க. தீர்க்கதரிசனமும், மதிநுட்பமும், தன்னிகரில்லாத் தலைமைத்துவமும் உள்ள எமது தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலில், ரணிலின் சதிப் பொறிகளில் தமிழர் நாம் சிக்கவில்லை. எப்படி ரணிலுக்கு தமிழ் மக்களாகிய நாம் இனியும் ஏமாற முடியுமா? இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதல் நாம், இலங்கை அரசியல் தலைமைகளால் ஏமாற்றப்பட்டுள்ளோம். டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம் போன்றவை எம்மை ஏமாற்றியதற்கான முக்கிய சான்றுகள். சர்வதேச அளவில் கூட தமிழராகிய எம்மைப் பற்றிய அவதூறு கூறி, சில நாடுகளில் தடையை ஏற்படுத்தி அண்மையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலம் எமது தமிழீழ தேசிய விடுதலைக்கு பயணத் தடையை ஏற்படுத்தி, எம்மை ஒடுக்கப் பார்க்கிறது இலங்கையின் அரசியல் தலைமை.

எமது நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கும், மனிதாபிமான பணிகளை முன்னெடுப்பதற்கும், சர்வதேசத்தின் ஆதரவை தமிழீழ மக்கள் பெறுவதற்கும், எமது ஒட்டு மொத்த அரசியல் பலத்தை இலங்கை அரசியல் தலைமைகளுக்கும், சர்வதேசத்துக்கும் வெளிக்காட்டுவதற்கு தமிழ் மக்களின் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் தேசியம், சுயநிர்ணய உரிமை தன்னாட்சி, தாயகம் என்பவற்றின் அடிப்படையில் சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும், தமிழ்மக்கள் அனைவரும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை பகிஷ்கரிப்போம். இதுவே எமது தமிழ் இனத்தின் விடுதலைக்கு பலம் சேர்க்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சுன்னாகம்

வலிகாம வலயத்துக்குட்பட்ட - உடுவில் மல்வத்தை றோ.க.த.க பாடசாலையில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 2:II, தரம் II, - இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 1, வகுப்பு 2:I, 2:II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில்பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 11.11.2005ஆம் திகதிக்கு முன், உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

# நினைவுச் சின்னங்களை ஆவணப்படுத்த முயற்சி

கடந்த காலங்களில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் போரினால் அழிக்கப்பட்ட பொதுக் கட்டடங்கள் மற்றும் தொன்மை வாய்ந்த நினைவுச் சின்னங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு ஆவணப்படுத்தும் முகமாக அதன் ஒரு பகுதியை அப்படியே பாதுகாக்கவே தமிழ்ச் சமூகம் விரும்புகிறது என, யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தமிழர் தாயகப் பகுதிகளில் பல தொன்மையான கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் என்பன யுத்த காரணமாக, சிங்களப் படைகளால் அழிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அழிக்கப்பட்ட கட்டடங்களைப் புனரமைப்புச் செய்யும்போது, அதன் பழைமையான தோற்றத்திலேயே புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது அழிவடைந்த கட்டடங்களின் ஒரு பகுதியை ஆவணப்படுத்தி வைக்கவேண்டும் என்பதை தமிழ்ச் சமுதாயம் விரும்புகிறது.

குடாநாட்டில் நடைபெற்ற அழிவுகளின் முக்கியமான நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்தும் முயற்சியில் மாநகர சபையினர் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




மக்கள் வங்கியால் சிசுதான கணக்கு ஆரம்பிக்கப்பட்ட போது- பாடசாலை உப அதிபர் பத்மகாந்தன் மங்கள விளக்கை ஏற்றுவதையும், அருகில் மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரகு மற்றும் கல்லூரி அதிபர் கையிலாயபிள்ளை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (29)

# வீடுகள் அமைப்பு

சுன்னாகம்

யுனிசெப் நிதி உதவியுடன் சுன்னாகம் ரயில் நிலய இடம்பெயர்ந்தோர் முகாமில் 8 வீடுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுன்னாகம் கிழக்கில் 6 குடும்பத்தினருக்கு புதிதாக மலசல கூடம், அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவியில் பொதுக் கிணறுகளும் துப்புரவு செய்யப் பட்டுள்ளன. (101)

# விவசாய அறிவுப் போட்டி

வடமராட்சி

கொழும்பு ஜினசேனா கம்பனி - சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி விவசாயிகளிடையே விவசாய போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக் கப்பட்டுள்ளது. (17)

# சத்தியசாயி சேவா நிலையத்தால் ஏழாவது வீடு கையளிப்பு!

சாவகச்சேரி

ஓலைக்கொட்டிலில் வறுமை நிலையில், கவலையுடன் வாழ்ந்துவந்த மிருசுவில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த 5 பிள்ளைகளைக் கொண்ட கணவனை இழந்த ப.வசந்தா குடும்பத்துக்கு, வட பிராந்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுவால் இன்று காலை 8 மணியளவில் வீடு ஒன்று கையளிக்கப் படவுள்ளது.

சாயிநிறுவனங்களின்இணைப்பு குழு இத்துடன் 7 வீடுகளைக் கட்டி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாயி பக்தர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவைக் குறைத்து மாதாந்த வருமானத்தில் குறைந்த பட்சம் 5 வீதம் சேமித்து இந்தச் சேவைகளை மேற்கொள்கின்றனர்.

சாயி நிறுவனத்தால் செய்யப்படும் சேவை நிபந்தனையற்ற அன்பின் அடிப்படையில் செய்யப்படுகிறது. இனம், மதம் இவற்றுக்கப்பால் எல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகள் என்ற அடிப்படையில் செய்யப்படுகிறது என, சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழு தலைவர் தெரிவித்தார்.

# ஐரோப்பிய கண்காணிப்புக்குழு யாழ்.அரச அதிபருடன் சந்திப்பு!


யாழ்ப்பாணம்


யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் நீண்ட கால கண்காணிப்பாளர் போல் கொஸ்ரிங்ர் நேற்று முன்தினம் அரச அதிபர் கே.கணேஸுடன் யாழ்.செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஆரம்ப வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தேர்தல் தொடர்பாக மேலும் சில விடயங்கள் பற்றி அரச அதிபருக்கும், ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றும் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரணில், மஹிந்த வருகையை கண்டித்து; யாழ்.குடாநாட்டில் பரவலாக சுவரொட்டிகள்




ஐக்கிய தேசியக் கட்சி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளுவதைக் கண்டித்தும், நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரியும் யாழ்.நகரில் பரவலாக எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டிகள் மற்றும் சுலோகங்கள், கச்சேரி, யாழ்.பொது நூலகம் மற்றும் பொது இடங் களில் பரவலாகக் காணப்படுகிறது.

# இராமநாதன் கல்லூரியில் உலக விஞ்ஞான தின விழா

சுன்னாகம்

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு - வலிகாமம் வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தால் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் விஞ்ஞானதின விழா நிகழ்வுகள் நடத் தப்படவுள்ளன.

இந்த விழாவில் விஞ்ஞான ஆசிரியர்களின் திறனை விருத்தி செய்யும் முகமாக, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பேராசிரியர்களின் கருத்துரைகளும், இடம்பெறுறவுள்ளது.

கடந்த ஆசிரியர் தினத்தன்று வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டு, ஜனாதிபதி விருது பெற்ற விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் பொ.நாகரட்ணம், விஞ்ஞான ஆசிரியர்களாகிய எஸ். கணேசகுமார், செல்வமலர் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதில் வலிகாமம் வலய பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (101)

# நிர்வாகசபை தெரிவு

சுன்னாகம்

சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானம் புனரமைப்பு தொடர்பாக, புதிய நிர்வாக சபை ஒன்று பிரதேச சபையால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் அண்மையில் சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் இடம் பெற்றது. போஷகராக கிராம அலுவலர்வி.மா.இராமலிங்கமும், தலைவராக எஸ்.இராமசாமியும், உப தலைவராக க.கணபதிப் பிள்ளையும், செயலாளராக எஸ்.செல்வஸ்தானும், உபசெயலாளராக து.ஜெயானந்தராஜாவும், பொருளாளராக செ.இராசலிங்கமும் மற்றும் 15 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (101)

# வாகனங்கள் நிறுத்தத் தடை

யாழ்ப்பாணம்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு, 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சூரன் தலைகாட்டலும், 07 ஆம் திகதி சூரசங்ஹாரமும் மணிவரையும் இடம்பெறவுள்ளதால், இந்த ஆலய வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்த்து, மேற்படி விழாக்கள் பக்திபூர்வமாக நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்து அடியார்களையும் மாநகரசபை ஆணையாளர் கேட்டுள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : க.நம்ஸனா
முகவரி : சண்டிலிப்பாய்.

அகவை ஒன்பது



பெயர் : பா.தாரணி
முகவரி : கோண்டாவில்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் புத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# காட்டு மிராண்டித்தனமான செயல்கள் தொடருமானால் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகள் உருவாகும்

## துணுக்காய் தேசிய எழுச்சிப்பேரவையின் கண்டன அறிக்கை

துணுக்காய் —

தமிழ்பேசும் மக்கள் மீது இராணுவம் மேற்கொண்டுவரும் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகள் தொடருமானால், சிங்கள தேசம் எதிர்காலத்தில் பாரதூரமான பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என துணுக்காய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்அந்த அறிக்கையில் - இலங்கை அரசால் யுத்த நிறுத்தம் போன்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமுலில் இருக்கும் இந்த வேளையில் - தொடர்ச்சியாக மக்கள் பதற்றத்தோடும், இடம்பெயர்வோடும் வாழும் அவலநிலையே உள்ளது.

சிங்கள இனவாதம் தமிழர்களை எதிரிகளாகத் தங்கள் மனங்களில் பதித்து வளர்த்தெடுக்கப்பட்டது. அரச கூலிப் படைகள் தமிழர் விரோதச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் இன்னும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த ஆத்ம ரீதியிலான போராட்டங்கள், சமா தான வழியிலான போராட்டங்களை எழுச்சியுடன் நடாத்திக் கொண்டு இருக்கின்றனர்.

நீதியும், நியாயமும் கிடைக்காத தமிழ்பேசும் மக்களின் கடந்தகால வரலாறு - ஆயுதப் போராட்டமாக வலிமை பெற்று, தமிழ் மக்களின் சக்தியாக நிற்கிறது.


இந்தநிலையில் சிங்கள அரச படைகளின் மிக மோசமான தாக்குதல்கள், கெடுபிடி கள் எம் மக்களுக்கு ஆத்திரமூட் டும் அபாய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அன்மையில் புத்தூர் கிழக்கில் அரச இராணுவம் - எமது தமிழ் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட வேளையில், அயலவர்களின் உதவியால் அந்தப் பெண் காப்பாற்றப்பட்டாள்.

இதனை மக்கள் ஒன்றிணைந்து எதிர்த்தபோது விரட்டியடிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் கண்மூடித்தனமாக இராணுவத்தினரால் கீழ்த்தரமான முறையிலும், துப்பாக்கிச் சூட்டில் தர்மராஜன், நிரோஜன் என்பவர்கள் இலக்காகி அந்த இடத்திலேயே மரண மானார்.

அத்துடன் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். மேலும் மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். தமிழர் தேசம் எல்லா வழிகளிலும் வளம் பெற்று வருவதை சிங்கள இனவாதம் புரிந்துகொண்டே எமது உணர்வுகளை ஆயுத முனையில் அடக்கி மிரட்ட நினைப்பது எமக்கு மிக வேதனையைத் தருகிறது. நாம் நீண்ட காலவரலாற்றின் ஊடாகச் சிங்கள இனவாதத்தால் மிக மோசமாக ஏமாற்றப்பட்டிருக்கிறோம்.

இந்த நிலையில் மக்களை ஆத்திரமூட்டும் இதுபோன்ற சம்பவங்கள் தொடருமானால், சிங்கள தேசம் எதிர்காலத்தில் பாரதூரமான பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆண்டுவிழா நிகழ்வில் - பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவி களின் நடன நிகழ்வையும் படங்களில் காணலாம். - படங்கள் கனகரவி.

## காணி அனுமதிப்பத்திரம் இன்றி உருத்திரபுரம் மக்கள் அவதி!

கிளிநொச்சி —

உருத்திரபுரம் கிழக்குப் பிரதேசத்தில் இருநூறுக்கும் மேற்பட்டோர் காணி அனுமதிப் பத்திரம் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

அனுமதிப்பத்திரங்கள் இல்லாததால், இவர்கள் காணி மாற்றம் செய்யமுடியாததுடன், வங்கியில் கடன் பெறமுடியாத சூழ்நிலையும் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இந்தப் பகுதியிலுள்ள அரச ஊழியர்கள் 10 லட்சம் ரூபா கடனைக் காணி அனுமதிப்பத்திரம் இன்மையால் பெறமுடியாதுள்ளதென இந்தப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ம.உமாசங்கர் தெரிவித்துள்ளார். காலதாமதமின்றி இந்தப் பகுதியில் காணிக் கச்சேரி நடத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊரக மேம்பாட்டு குழுவுக்கான நிர்வாகத் தெரிவு

வட்டக்கச்சி —

வட்டக்கச்சி - சிவிக்சென்ரர் இராம சேவையாளர் பிரிவில் ஊரக மேம்பாட்டுக்குழுவுக்கான தெரிவு அண்மையில் வட்டக்கச்சி வலயப் பொறுப்பாளர் இராமஜெயம் தலைமையில் வட்டக்கச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிர்வாகக் குழுவில், தலைவராக கி.ஆழ்வாப்பிள்ளை, உபதலைவராக ம.ஜெனோரஞ்சனி, செயலாளராக செ.பெனடிற், உபசெயலாளராக யோகராணி, பொருலாளராக ச.மன்மதராஜா, நிர்வாக உறுப்பினர்களாக- கிருஸ்ணராஜா, சிவபாலச்சந்திரன், ரொ.இருதயமலர், சா.பாலசுப்பிரமணியம், செ.கௌசலா, மு.கந்தசாமி, பா.விஜயலட்சுமி ஆகியோரும், போசகராக சிவிக்சென்ரர் கிராம அலுவலகர் ஜோன் ஜெயகநாதனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

(09)

## மூலிகைப் பண்ணைக்கான அடிக்கல் நாட்டுவிழா

கிளிநொச்சி —

கிளிநொச்சி - கல்மடு நகரில் பாரிய மூலிகைப் பண்ணைக்கான அடிக்கல்லை நேற்று முன் தினம் கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் நாட்டி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையிலேயே இது ஆரம் பிக்கப் பட்டுள்ளது.

எஸ்.சத்தியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சித்த மருத்துவ பீடத் தலைவர், கிராம சேவை அலுவலர். சித்த மருத்துவ சங்கச் செயலாளர் உட்பட பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதற்கென 100 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடு அமைக்கும் திட்டம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நாவிதன்வெளிப் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள சவளக்கடை கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இருப்பிடங்களை இழந்து, நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு தமிழீழ புனர்வாழ்வுக் கழகம் நிரந்தர வீட்டுத்திட்டத்தை அமைக்கவுள்ளது.

இந்தப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள முகாமில் சுனாமியால் பாதிகப்பட்ட சுமார் 150 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டத்தை அமைப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு- தமிழர் புனர்வாழ்வுக்கழத்தினால் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு தற்காலிக கொட்டகைகள் அமைத்து, குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரதேச காணிகளிலே சுமார் 5 லட்சம் பெறு மதியான வீடுகளை அமைப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நட வடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை - தற்பொழுது பெய்து வரும் மழையினால், தற்காலிக கொட்டகைகளில் தங்கியுள்ள சிறுவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வருவதாகப் அங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் 05

1799: முதன்முதலாக கோபன் ஹேகன் என்ற இடத்தில் உடற்பயிற்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

1900: ஸ்பெயின் அமெரிக்கப் போர் முடிந்ததும் கியூபா அமெரிக்க இராணுவ நிர்வாகத்தின் கீழ் வந்தது. கியூபாவிற்கென தனியான ஒரு அரசியல் சட்டத்தை வகுப்பதெற்கென ஒரு மாநாடு கூடியது.

1915: அமெரிக்காவின் போர்க் கப்பலான ''நோர்த் கரோலினா'' கப்பலிலிருந்து முதன் முதலாக விமானம் மேலெழுந்து பறந்து பின்னர் வந்திறங்கியது.

1917: நேச நாடுகளின் இராணுவத் தளபதிகளது உச்சி மகாநாடு ராபல்லோ என்ற இடத்தில் ஆரம்பமாகியது.

1918: ரூமேனியாவின் தேசிய சபையை அமெரிக்கா அங்கீகரித்தது.

1920: இந்தியாவில் முதன் முதலாக செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

1925: முஸோலினி இத்தாலியில் அனைத்து இடதுசாரிக் கட்சிகளையும் தடைசெய்தார்.

☆ முதன் முதலாகத் தானியங்கிப் போக்குவரத்து விளக்குகள் (சிவப்பு, செம்மஞ்சள், பச்சை) பிரிட்டனின் வொல்வர்ஹாம்ப்டன் என்னுமிடத்தில் பொருத்தப்பட்டன.

1930: விட்டமின் பி-1 ஐக் கண்டுபிடித்தவரும், 1929 ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவர்களுள் ஒருவருமான கிறிஸ்டியன் ஐக்மன் நெதர்லாந்தில் காலமானார்.

1940: அமெரிக்க வரலாற்றிலேயே முதன் முறையாக ரூஸ்வெல்ட் மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1943: சர்வதேச சமாதான அமைப்பு நிறுவப்பட அமெரிக்கா முழு அளவில் உதவி செய்ய வேண்டும் என்ற ''கான்னலி'' தீர்மானத்தை அமெரிக்க செனட் மேற்கொண்டது.

☆ ஜப்பான் ரோக்கியோவில் கிழக்காசிய மகாநாட்டைக் கூட்டியது.

1945: "மன்னரா? நாடா? என்று கேள்வி எழுந்த போது, மன்னரை விட என் தாய் நாட்டையே உயர்வாகக் கருதினேன். இந்தியாவை இந்தியக் கண்களோடு பார்த்ததன் விளைவுதான் நான் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தது'' எனத் தமக்கெதிராக ஆங்கிலேயரால் டில்லி செங்கோட்டையில் தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு நடாத்தப்பட்ட வழக்கின் போது, இந்திய தேசிய இராணுவத்தின் மும்மணிகளில் ஒருவரான கப்டன் ஷா நவாஸ்கான் கூறுனேன் புகழ்பெற்ற இரண்டு விசாரணைகளில் இது இரண்டாவது விசார ணையாகக் கருதப்படுகிறது. விசாரணை முடிவில் மும்மணிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

1952: பசுபிக் கடலில் குரைஸ் தீவுகளிலும், காம்சாட்காவின் கிழக்குக் கடற்கரையின் தென்பகுதியிலும், மரமுஷீர் என்ற இடத்திலும் கடலுக்கடியில் சில நிமிடங்களுக்கு நில நடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கம் ஏற்பட்டு 45 நிமிடங்களுக்குப் பின்னர் 100 கி.மீற்றர் வேகத்தில் 10 மீற்றர் வரையான உயரத்துடனும் எழுந்த சுனாமிப் பேரலை எழுந்து குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து அனைத்தையும் அழித்துச் சென்றது. ஏறக்குறைய 20 நிமிடங்களின் பின்னர் எழுந்த முதல் பேரலையை விட வேகமானதும் மோசமானதுமான சுனாமி அலை எஞ்சியவற்றையும் அள்ளிச் சென்றது.

1954: பர்மாவிற்கும், ஜப்பானுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது.

1962: சவூதி அரேபியா ஐக்கிய அரபு குடியரசில் இருந்து விலகியது.

1964: வெள்ளிக் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்கா மரீனர்-3 என்ற விண்கலத்தை ஏவியது. இந்த முயற்சி விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தோல்வியடைந்தது.

1991: அமெரிக்காவின் ஓமாகாவிலுள்ள மிருகக் காட்சிச் சாலையில் பரிசோதனைக் குழாய் மூலம் கருக்கட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட புலிக்குட்டி பிறந்தது.

1993: ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் இணைந்து "யூரோ கார்ப்ஸ்" என்னும் புதிய இராணுவ அமைப்பினை உருவாக்கின.

1995: ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்களில் தேர்தெடுக்கப்பட்ட நகர ஆணையாளர்கள், உலக நீதி மன்றத்தில் "அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது'' என்று வாக்குமூலம்கொடுக்கப்போவதாக அறிவித்தனர்.

☆ டெல்அவிவ்வில் நடந்த சமாதானப் பேரணியில் ஸ்ரேலியப் பிரதம மந்திரி யீட்சார்க ராவினை, யூகால் அமீர்கான் என்ற இடது சாரி யூதர் சுட்டுக்கொலைசெய்தார்.

தொகுப்பு : — சந்துரு

## பாண்டியன் குளம், துணுக்காய் பகுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு

மல்லாவி —

பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசத்தில் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் பெரும் போக செய்கையில் ஈடுபடுவோர் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

துணுக்காய்ச் சந்தைப் பகுதியிலும், மல்லாவி நகர்ப்பகுதிகளிலும் நடமாடும் கால்நடைகள், நகர்ப்பகுதிகளிலுள்ள கடை ஓரங்களிலும், வீதிகளிலும் தங்கிவருவதால் சுகாதார சீர்கேட்டை விளைவிப்பதுடன் விபத்துக்களும் ஏற்பட வாய்ப்பாகின்றன.

அத்துடன் தற்போது பெரும் போக நெற்செய்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதால், விளையும் பயிர்களை இவை அழித்து வருகின்றன.

இந்தக் கட்டாக்காலி கால் நடைகளை அதன் பராமரிப்பாளர்கள் பட்டிகளில் அடைத்துக் கட்டி வளர்க்காமையினால் இவ்வாறான விளைவுகள் ஏற்படுகின்றன.

இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.